ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வேதாந்த தேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக
ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

(December 1999)

This version of Sri Desika Prabhandham is prepared by Sri Ahobila Muth, Inc. for easy recitation of the verses. Use of this MS-Word document without the written permission from Sri Ahobila Muth, Inc. is prohibited. For more information contact dileepan@cdc.net.

ஸ்ரீ:
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

## அட்டவணை


7. அடைக்கலப் பத்து .................................. 1
1. அமிருதரஞ்சனி.......................................... 3
2. அதிகாரசங்கிரகம்..................................... 8
3. அமிருதசுவாதினி...................................... 16
4. பரமபதசோபானம் ..................................... 22
5. பரமதபங்கம்............................................. 26
6. மெய்விரதமான்மியம் ................................ 35
8. அருத்தபஞ்சகம்......................................... 41
9. ஸ்ரீ வைணவதினசரி .................................. 43
10. திருச்சின்ன மாலை ................................. 45
11. பன்னிருநாமம் ........................................ 48
12. திருமந்திரச்சுருக்கு ................................. 50
13. துவயச்சுருக்கு ......................................... 52
14. சரமசுலோகச்சுருக்கு .................................. 54
15. கீதார்த்தசங்கிரகம்..................................... 56
16. மும்மணிக்கோவை ...................................... 59
17. நவமணிமாலை........................................... 62
18. பிரபந்தசாரம் ........................................... 65
பிள்ளையந்தாதி........................................... 69

சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

7. அடைக்கலப் பத்து

7.1: *
பத்தி முதலாமவற்றுள், பதி எனக்கு கூடாமல் /
எத்திசையும் ஓழன்ரேடி, இளேத்துவிழும் காகம்போல் *
முத்தி தரும் நகரேழில், முக்கியமாம் கச்சிதன்னில் /
அத்திகிரி அருளாளர்க்கு, அடைக்கலம் நான் புகுந்தேனே. (2)

7.2:
சடைமுடியன் சதுமுகன் என்று, இவர்முதலாந் தரமெல்லாம் /
அடையவினேப் பயனுகி, அழிந்துவிடும் படிகண்டு *
கடிமலராள் பிரியாத, கச்சிநகர் அத்திகிரி /
இடமுடைய அருளாளர், இணேயடிகள் அடைந்தேனே.

7.3:
தந்திரங்கள் வேறின்றித், தமதுவழி அழியாது /
மந்திரங்கள் தம்மாலும், மற்றுமுள்ள வுரையாலும் *
அந்தரங்கண்டு அடிபணிவார், அனேவர்க்கும் அருள்புரியும் /
சிந்துரவெற்ப் இறையவனுர், சீலமல்லது அறியேனே.

7.4:
காகம் இரக்கதன் மன்னர், காதலி கத்திரபந்து /
நாகம் அரன் அயன் முதலா, நாக நகரார் தமக்கும் *
போகமுயர் வீடுபெறப், பொன்னருள் செய்தமை கண்டு /
நாகமலே நாயகனுர், நல்லடிப்போது அடைந்தேனே.

7.5:
உகக்கும் அவை உகந்து, உகவாவனேத்தும் ஒழிந்து / உறவுகுண -
மிகத்துணிவு பெறவுணர்ந்து, வியன்காவல் எனவரித்துச் *
சகத்திலொரு புகலிலாத், தவமறியேன் மதிட்கச்சி /
நகர்கருணே நாதனே, நல்லடைக்கலமாய் அடைந்தேனே.

7.6:
அளவுடையார் அடைந்தார்க்கும், அதனுரையே கொண்டவர்க்கும் /
வளவுரை தந்தவனருளே, மன்னிய மாதவத்தோர்க்கும் *
களவொழிவார் எமரென்ன, இசைந்தவர்க்குங் காவலராம் /
துளவமுடி அருள்வரதர், துவக்கில் எனே வைத்தேனே.

7.7:
உமதடிகள் அடைகின்றேன் என்று, ஒருகால் உரைத்தவரை /
அமையுமினி என்பவர்போல், அஞ்சலெனக் கரம்வைத்து *
தமதனேத்தும் அவர்தமக்கு, வழங்கியும் தாம் மிகவிளங்கும் /
அமைவுடைய அருளாளர், அடியிணேகள் அடைந்தேனே.

7.8:
திண்மை குறையாமைக்கும், நிறைகைக்குந் தீவினையால் /
உண்மை மறவாமைக்கும், உளமதியில் உகக்கைக்குந் *
தண்மை கழியாமைக்கும், தரிக்கைக்குந் தணிகைக்கும் /
வண்மையுடை அருளாளர், வாசகங்கள் மறவேனே.

7.9:
சுரிதி நினை இவையறியுந், துணிவுடையார் தூமொழிகள் /
பரிதிமதி ஆசிரியர், பாசுரஞ்சேர்ந்து அருக்கணங்கள் *
கருதியொரு தெளிவாளாற், கலக்கமறுத்து அத்திகிரிப் /
பரிதிமதி நயனமுடை, பரமனடி பணிந்தேனே.

7.10: *
திருமகளும் திருவடிவும், திருவருளும் தெள்ளறிவும் /
அருமையிலாமையும் உறவும், அளப்பரிய வடிவரசுங் *
கருமம் அழிப்பளிப்பு அமைப்புங், கலக்கமிலா வகைநின்ற /
அருள் வரதர் நிலையிலக்கில், அம்பென நான் அமிழ்ந்தேனே. (2)

7.11: *
ஆறுபயன் வேறில்லா, அடியவர்கள் அனைவர்க்கும் /
ஆறுமதன் பயனுமிவை, ஒருகாலும் பலகாலும் *
ஆறுபயன் எனவேகண்டு, அருளாளர் அடியிணைமேல் /
கூறியநற் குணவுரைகள், இவைபத்தும் கோதிலவே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

சீரார்த்தூபுல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

1. அமிருதரஞ்சனி

1.1: *
தம் பரமென்றிரங்கித், தளரா மனந் தந்தருளால் /
உம்பர் தொழுந் திருமால், உகந்தேற்கும் உபாயமொன்ருல் *
நம் பிறவித்துயர் மாற்றிய, ஞானப் பெருந்தகவோர் /
சம்பிரதாய மொன்றிச், சதிர்க்கும் நிலை சார்ந்தனமே. (2)

1.2:
கடலமுதத்தைக் கடைந்து சேர்த்த /
திருமாலடிகாட்டிய * நம்
தேசிகர்த்தம், நிலைபற்றிச் சேர்ந்தோமே.

1.3:
முத்திக் கருள்சூட, மூன்றைத் தெளிமுன்னம் *
இத்திக்காலேற்கும் இதம்.

1.4:
மூன்றிலொரு மூன்றும், மூவிரண்டும் முந்நான்கும் *
தோன்றத் தொலையுந்துயர்.

1.5:
உயிரு முடலும், உடலாக வோங்கித் /
தயிர் வெண்ணெ, தாரணியோடுண்டான் * பயிரில் –
களைபோல், அசுரரைக் காய்ந்தான் / தன்கையில் –
வளை போல், எம் ஆசிரியர் வாக்கு.

1.6:
அலையற்ற ஆரமுதக் கடல், அக்கடலுண்ட முகில் /
விலையற்ற நன்மணிவெற்பு, வெயில் நிலவோங்கு பகல் *
துலை யுற்றனவென்பர், தூமறை சூடுந் துழாய் முடியார்க்கு /
இலை யொத்தன அவன்பாதம், பணிந்தவர்க் கெண்ணுதற்கே.

1.7:
உத்தி திகழும், உரை மூன்றின் மும்மூன்றும் /
சித்த முணரத் தெளிவித்தார் * முத்திதரும் –
மூலமறையின், முடிசேர் முகில்வண்ணன் /
சீலமறிவார் சிலர்.

1.8:
எனக்குரியன் எனது பரம் என்பேறென்னுது /
இவையனைத்தும் இறையில்லா இறைக் கடைத்தோம் /
தனக்கிணை யொன்றில்லாத திருமால்பாதம் /
சாதனமும் பயனுமெனச் சலங்கள் தீர்ந்தோம் *
உனக்கு இதமென்று ஒரு பாகனுரைத்தது உற்ருேம் /
உத்தமனு மவனுதவி யெல்லாங் கண்டோம் /
இனிக் கவருமவை கவர இகந்தோம் சோகம் /
இமையவ ரோடென்று இனி நாமிருக்கு நாளே.

1.9:
தத்துவங்க ளெல்லாம், தகவாலறிவித்து /
முத்தி வழிதந்தார் மொய்கழலே * அத்திவத்தில் –
ஆரமுதம் ஆரும், இருநிலத்தி லென்றுரைத்தார் /
தார முதலோதுவித்தார் தாம்.

1.10:
திருநாரணனெனுந் தெய்வமும், சித்தும் அசித்துமென்று /
பெரு நான்மறை முடிபேசிய, தத்துவம் மூன்றிவை கேட்டு *
ஒரு நாளுணர்ந்தவர், உய்யும் வகையன்றி ஒன்றுகவார் /
இரு நாலெழுத்தின், இதயங்களோதிய எண் குணரே.

1.11:
கரணமாய் உயிராகி அனைத்துங் காக்கும் /
கருணை முகில் கமலையுடன் இலங்கு மாறும் /
நாரணனார் வடிவான வுயிர்களெல்லாம் /
நாமென்று நல்லடிமைக் கேற்குமாறும் *
தாரணி நீர் முதலான மாயை காலம் /
தனிவான் என்றிவை உருவாந் தன்மை தானும் /
கூரணி சீர் மதியுடைய குருக்கள் காட்ட /
குறிப்புடன் நாம் கண்ட வகை கூறினோமே.

1.12:
அப்படி நின்ற, அமலன் படியெல்லம் /
எப்படி எம்முள்ளத் தெழுதினார் * எப்படியும் –
எரார் சுருதி யொளியால், இருள் நீக்கும் /
தாரா பதி அனையார் தாம்.

1.13:
செம்பொற் கழலிணை, செய்யாள் அமருந் திருவரங்கர் /
அன்பர்க் கடியவராய், அடிசூடிய நாமுரைத்தோம் *
இன்பத் தொகையென எண்ணிய, மூன்றி லெழுத்தடைவே /
ஐம்பத்தொரு பொருள், ஆருயிர் காக்கும் அமுதெனவே.

1.14:
யான் அறியுஞ் சுடராகி நின்றேன், மற்றும் யாதுமலேன் /
வானமருந் திருமாலடியேன், மற்றொர் பற்றுமிலேன் *
தான் அமுதாமவன் தன், சரணே சரணென்றடைந்தேன் /
மானமிலா அடிமைப், பணி பூண்ட மனத்தினனே.

1.15:
சீலங் கவர்ந்திடும், தேசிகர் தேசின் பெருமையினால் /
தூலங்க ளன்ன, துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல்தரும் *
கோலங் கழிந்திடக், கூறியகாலங் குறித்துநின்றோம் /
மேலிங்கு நாம் பிறவோம், வேலை வண்ணனை மேவுதுமே.

1.16:
வண்மையுகந்த அருளால், வரந் தரும் மாதவனார் /
உண்மை யுணர்ந்தவர், ஓதுவிக்கின்ற உரைவழியே *
திண்மை தருந்தெளிவொன்றால், திணி யிருள் நீங்கியநாம் /
தண்மை கழிந்தனம், தத்துவங் காணுந் தரத்தினமே.

1.17:
நாராயணன் பரன், நாம் அவனுக்கு நிலையடியோம் /
சோரா தனைத்தும், அவனுடம் பென்னுஞ் சுருதிகளால் *
சீரார் பெருந்தகைத், தேசிகர் எம்மைத் திருத்துதலால் /
தீரா மயலகற்றும், திறம்பாத் தெளிவுற்றனமே.

1.18:
ஒன்றே புகலென்று, உணர்ந்தவர் காட்டத் திருவருளால் /
அன்றே யடைக்கலங் கொண்ட, நம்மத்திகிரித் திருமால் *
என்றே இசையின் இணையடி சேர்ப்பர், இனிப்பிறவோம் /
நன்றே வருவதெல்லாம், நமக்குப் பரமொன்றிலதே.

1.19:
சிறுபயனிற் படியாத தகவோர் எம்மைச் –
சேர்க்க / அடைக்கலங் கொண்ட திருமால் தானே /
மறு பிறவி யறுத்து அழியா வானில் வைக்கும் /
மனமே நீ மகிழாதே யிருப்பதென்கொல் *
உறுவ துனக் குரைக்கேன் இங்கிருக்குங் காலம் /
ஒரு பிழையும் புகுதாத வுணர்த்தி வேண்டிப் /
பெருவதெலா மிங்கே நாம் பெற்றுவாழப் /
பேரடிமையால் ஏதென்று இகழேல் நீயே.

1.20:
சாக்கியர் சைனர்கள், சார்வாகர் சாங்கியர் சைவர் மற்றும் /
தாக்கியர் நூல்கள் சிதையத், தனிமறையின் கருத்தை *
வாகியம் முப்பதினால், வகைசெய்து வியாகரித்தோம் /
தேக்கி மனத்துள் இதனைத், திணியிருள் நீங்குமினே.

1.21:
தள்ளத் துணியினும், தாய் போலிரங்குந் தனி தகவால் /
உள்ளத் துறைகின்ற, உத்தமன் தன்மை யுணர்ந் துரைத்தோம் *
முள் ஒத்த வாதியர், முன்னே வரினெங்கள் முக்கியர் பால் /
வெள்ளத்திடையில் நரிபோல், விழிக்கின்ற வீணர்க்களே.

1.22:
செய்யேல் மறமென்ற, தேசிகன் தாதை யவனுரைத்த /
மெய்யே யருள் பொருள் சூடிய, வெண்மதி காதலியாம் *
பொய்யே பகைப்புலன், ஐயிரண் டொன்று பொருங்கருவி /
கையேறு சக்கரக் காவலன், காவ லடைந்தவர்க்கே.

1.23:
அந்தமிலாதி தேவனழி செய்தடைத்த /
அலைவேலை யோத மடையச் /
செந்தமிழ் நூல் வகுத்த சிறுமாமனிச்சர் /
சிறுகைச் சிறுங்கையது போல் *
சந்தமெலா முரைப்ப இவையென்று / தங்கள் –
இதயத் தடக்கி / அடியோம்
பந்தமெலாமறுக்க அருள் தந்துகந்து /
பரவும் பொருள்கள் இவையே.

1.24:
முக்குணமாயையின், மூவெட்டின் கீழ்வரு மூவகையும் /
இக்குணமின்றி யிலங்கிய, காலச் சுழியினமும் *
நற்குணமொன்றுடை நாகமும், நாராயணனுடம்பாய்ச் /
சிற்குண மற்றவையென்று உரைத்தார், எங்கள் தேசிகரே.

1.25:
எனதென்பதும், யானென்பது மின்றித் /
தனதென்று தன்னையுங் காணாது * உனதென்று –
மாதவத்தால் மாதவற்கே, வன்பரமாய் மாய்ப்பதனில் /
கைத்தான் கைவளரான் காண்.

1.26:
பல்வினைவன் கயிற்றால், பந்த முற்று உழல்கின்றனரும் /
நல்வினை மூட்டிய, நாரணனார் பதம் பெற்றவரும் *
தொல்வினை யென்றுமில்லாச், சோதி வானவரும் சுருதி /
செல் வினையோர்ந்தவர், சீவரென்றோதச் சிறந்தனமே.

1.27:
ஆரணங்களெல்லாம், அடிசூடமேல் நின்ற /
காரணமாய் ஒன்றால் கலங்காதான் * நாரணனே –
நம்மேல் வினைகடியும், நல்வழியில் தான்நின்று /
தன்மேனி தந்தருளும் தான்.

1.28:
குடல்மிசையொன்றியும், கூடியும் நின்ற கொடுந் துயரும் /
உடல்மிசைத் தோன்றுமுயிரும், உயிர்க்குயிரும் இறையும் *
கடல்மிசைக் கண்ட, தரளத்திரள் அவைகோத்த பொன்னூல் /
மடல்மிசை வார்த்தை, அதன் பொருலென்ன வகுத்தனமே.

1.29:
தத்துவந்தன்னில், விரித்திடத் தோறு மிரண்டுதனில் /
பத்தி விலக்கிய, பாசண்டர் வீசுறும் பாசமுறாா் *
எத்திசையுந் தொழுதேத்திய, கீர்த்தியர் எண்டிசையார் /
சுருத்தர் உரைத்த, சுளகம் அருந்திய தூயவரே

1.30:
வினைத்திரள் மாற்றிய, வேதியர் தந்த நல்வாசகத்தால் /
அனைத்து மறிந்தபின், ஆரும் பயனுமென வடைந்தோம் *
மனத்திலிருந்து, மருந்தமுதாகிய மாதவனார் /
நினைத்தல் மறத்தல் அரிதாய, நன்னிழல் நீள் கழலே.

1.31:
ஓதுமறை நான் கதனில், ஓங்குமொரு மூன்றினுள்ளே /
நீதி நெறிவழுவா நிற்கின்றோம் * போதமரும் –
பேரா யிரமுந், திருவும் பிரியாத /
நாராயண னருளா நாம்.

1.32:
ஊன்றந்து நிலை நின்ற வுயிருந் தந்து /
ஓர் உயிராகி யுள்ளொளி யோடுறைந்த நாதன் /
தான் தந்த வின்னுயிரை எனதென் றுமல் /
நல்லறிவுந் தந்தகலா நலமுந் தந்து *
தான் தந்த நல்வழியாற் தாழ்ந்த வென்னைத் /

தன்தனுக்கே பாரமாகத் தானே யெண்ணி /
வான்தந்து மலரடியுந் தந்து / வானோர் –
வாழ்ச்சிதர மன்னருளால் வரித்திட் டானே.

1.33:
திருமாலடையிணையே, திண்சரணுக் கொண்டு /
திருமாலடியிணையே சேர்வார் * ஒருமால் –
அருளால் அருளாத, வானோர்கள் வாழ்ச்சி /
அருளால் நமக்களித்தார் ஆய்ந்து.

1.34:
சேர்க்கும் திருமகள் சேர்த்தியில், மன்னுதல் சீர்ப் பெரியோர்க்கு /
ஏற்குங் குணங்கள், இலக்காம் வடிவி லிணையடிகள் *
பார்க்குஞ் சரணதில், பற்றுதல் நம் நிலைநாம் பெறும் பேறு /
ஏற்கின்ற வெல்லைகள் எல்லாம் களையற வெண்ணினமே.

1.35:
திருமாலடியிணை சேர்ந்து, திகழ்ந்த அடிமைபெறத் /
திருநாரணன் சரண், திண் சரணுகத் துணிந்தடைவோர் *
ஒருநாலுறைக்க, உயிர் தருமந்திர மோதியநாம் /
வருநாள் பழுதற்று வாழும், வகையதில் மன்னுவமே.

1.36:
மற்றொரு பற்றின்றி, வந்தடைந்தார்க் கெல்லம் /
குற்ற மறியாத கோவலனுர் * முற்றும் –
வினை விடுத்து, விண்ணவ ரோடொன்ற விரைகின்றுர் /
நினைவுடைத்தாய், நீ மனமேநில்லு.

1.37:
எல்லத் தருமமும், என்னை யிகழ்ந்திடத் தான் இகழாது /
எல்லாந் தனதென, எல்லாமுகந்தருள் தந்த பிரான் *
மல்லார் மதக்களிறொத்த, வினைத் திரள் மாய்ப்பனென்ற –
சொல்லால் / இனியயொருகால், சோகியாத் துணிவுற்றனமே.

1.38:
வினைத்திரள் மாற்றிய, வேதியர் தந்தருள் வாசகத்தால் /
அனைத்துமறிந்த பின், ஆறும் பயனுமென வடைந்தோம் *
மனத்திலிருந்து, மருத்த முதாகிய மாதவனுர் /
நினைத்தல் மனத்தில் அரிதாகி, நின்றன நீள்கழலே.

1.39: *
எட்டில் ஆறிரண்டிலொன்றில், எங்கும் ஆறு இயம்புவார் /
விட்ட ஆறுபற்றும் ஆறு, வீடு கண்டு மேவுவார் *
சிட்டாரான தேசயர்ந்த, தேசிகர்க்குயர்ந்து மேல் /
எட்டு மூறும் ஊடறுத்தது, எந்தைமால் இரக்கமே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

சீரார்த்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

2. அதிகாரசங்கிரகம்

2.1: *
பொய்கைமுனி பூதத்தார், பேயாழ்வார் / தண்
 பொருநல் வரும் குருகேசன் விட்டுசித்தன் /
தூய்ய குலசேகரன் நம்பாணநாதன் /
 தொண்டரடிப்பொடி மழிசைவந்த சோதி *
வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் /
 மங்கையர் கோனென்றிவர்கள் மகிழ்ந்து பாடும் /
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் /
 தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே. (2)

2.2:
இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும்பேற்றில் /
 இகழாத பல்லுறவில் இராகம் மாற்றில் /
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில் /
 தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில் *
அன்பர்க்கே யவதரிக்கும் ஆயன்நிற்க /
 அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு /
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும் /
 தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே.

2.3: *
என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம்புக்கு /
 யானடைவே அவர் குருக்கள் நிரைவணங்கிப் /
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல் /
 பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி *
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார் /
 நாதமுனி சடகோபன் சேனைநாதன் /
இன்னமுதத் திருமகளென்று இவரை முன்னிட்டு /
 எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே. (2)

2.4:
ஆரணநூல்வழிச் செவ்வை, அழித்திடும் ஐதுகர்க்கு / ஓர்
வாரணமாய், அவர் வாதக் கதலிகள் மாய்த்தபிரான் *
ஏரணிகீர்த்தி, இராமானுசமுனி இன்னுரைசேர் /
சீரணி சிந்தையினோம், சிந்தியோம் இனித் தீவினையே.

2.5:
நீளவந்து இன்று விதிவகையால், நினைவொன்றியனும் /
மீள வந்து இன்னும்வினையுடம் பொன்றி, விழுந்துழலாது *
ஆளவந்தாரென வென்று, அருள் தந்து விளங்கிய சீர் /
ஆளவந்தார் அடியோம், படியோமினி அல்வழக்கே.

2.6:
காளம் வலம்புரியன்ன, நற்காதலடியவர்க்குத் /
தாளம் வழங்கித், தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல் *
மூளும் தவநெறி மூட்டிய, நாதமுனிகழலே /
நாளுந் தொழுதெழுவோம், நமக்கார்நிகர் நானிலத்தே.

2.7: *
ஆளும் அடைக்கலமென்று எம்மை, அம்புயத்தாள்கணவன் /

தாளிணை சேர்ந்து, எமக்கும் அவை தந்த தகவுடையார் *
மூளுமிருட்கள்விள்ள, முயன்றேதிய மூன்றினுள்ளும் /
நாளும் உகக்க இங்கே, நமக்கோர் விதிவாய்க்கின்றதே. (2)

2.8: *
திருவுடன் வந்த செழுமணிபோல், திருமாலிதயம் /
மருவிடமென்ன மலரடிசூடும், வகைபெருநாம் *
கருவுடன் வந்த கடுவினை யாற்றில், விழுந்தொழுகாது /
அருவுடன் ஐந்தறிவார், அருள்செய்ய அமைந்தனரே. (2)

2.9:
அமையா இவையெனும் ஆசையினல், அறு மூன்று உலகில் /
சுமையான கல்விகள் சூழவந்தாலும், தொகை இவை என்று *
இமையா இமையவர் ஏத்திய, எட்டிரண்டெண்ணிய / நம்
சமயாசிரியர், சதிர்க்கும் தனி நிலை தந்தனரே.

2.10:
நிலைதந்த தாரகனுய், நியமிக்கும் இறைவனுமாய் /
இலதொன்று எனுவகை எல்லாம், தனதெனும் எந்தையுமாய்த் *
துலை ஒன்று இலை என நின்ற, துழாய்முடியான் உடம்பாய் /
விலையின்றி நாமடியோமெனும், வேதியர்மெய்ப்பொருளே.

2.11:
பொருளொன்றென நின்ற, பூமகள் நாதன் அவனடி சேர்ந்து /
அருளொன்றுமன்பன், அவன்கொள் உபாயம் அமைந்த பயன் *
மருள் ஒன்றியவினை வல்விலங்கு என்று, இவை ஐந்தறிவார் /
இருள் ஒன்றிலாவகை, எம் மனந் தேற வியம்பினரே.

2.12:
தேற வியம்பினர், சித்தும் அசித்தும் இறையுமென /
வேறுபடும் வியன் தத்துவ மூன்றும், வினையுடம்பில் *
கூறுபடும் கொடு மோகமும், தானிறையாம் குறிப்பும் /
மாற நினைந்தருளால், மறை நூல் தந்த வாதியரே.

2.13:
வாதியர்மன்னு தருக்கச் செருக்கில், மறைகுலையச் /
சாதுசனங்களடங்க நடுங்க, தனித்தனியே *
ஆதி யெனுவகை, ஆரணதேசிகர் சாற்றினர் / நம்
போதமரும், திருமாதுடன் நின்ற புராணனையே.

2.14:
நின்ற புராணன் அடியிணை ஏந்தும், நெடும்பயனும் /
பொன்றுதலே நிலையென்றிடப், பொங்கும் பவக்கடலும் *
நன்றிது தீயிது என்று, நவின்றவர் நல்லருளால் /
வென்றுபுலங்களை, வீடினைவேண்டும் பெரும்பயனே.

2.15:
வேண்டும் பெரும்பயன், வீடென்றறிந்து வீதிவகையால் /
நீண்டும் குறிகியும் நிற்கும், நிலைகளுக் கேற்கும் அன்பர் *
மூண்டு ஒன்றில் மூலவினை மாற்றுதலில், முகுந்தனடி –
பூண்டன்றி / மற்றோர் புகல் ஒன்றிலையென நின்றனரே.

2.16:
நின்ற நிலைக்குற நிற்கும் கருமமும், நேர் மதியால் /

நன்றென நாடிய ஞானமும், நல்கும் உட்கண்ணுடையார் *
ஒன்றிய பத்தியும், ஒன்றுமிலா விரைவார்க்கு அருளால் /
அன்று பயந்தரும், ஆறும் அறிந்தவர் அந்தணரே.

2.17:
அந்தணர் அந்தியர், எல்லையில் நின்ற அனைத்துலகும் /
நொந்தவரே முதலாக, நுடங்கிய அனன்னியராய் *
வந்தடையும்வகை, வன் தகவு ஏந்தி வருந்திய / நம் –
அந்தமிலா ஆதியை, அன்பர் அறிந்தறிவித்தனரே.

2.18:
அறிவித்தனரன்பர், ஐயம் பறையும் உபாயமில்லாத் /
துறவித்துனியில், துணையாம் பரனை வரிக்கும் வகை *
உறவு இத்தனை இன்றி, ஒத்தாரென நின்ற வும்பரை நாம் /
பிறவித்துயர் செகுப்பீரென்று, இரக்கும் பிழையறவே.

2.19:
அறவே பரமென்று, அடைக்கலம் வைத்தனர் அன்றுநம்மைப் /
பெறவேகருதிப், பெருந்தகவுற்ற பிரானடிக் கீழ் *
உறவே இவன் உயிர் காக்கின்ற, ஓர் உயிர் உண்மையை / நீ
மறவேலென, நம்மறை முடிசூடிய மன்னவரே.

2.20:
மன்னவர் விண்ணவர், வானோர் இறையொன்றும் வான் கருத்தோர் /
அன்னவர் வேள்வி, அனைத்து முடித்தனர் அன்புடையார்க்கு *
என்ன வரம் தரவென்ற, நம் அத்திகிரித் திருமால் /
முன்னம் வருந்தி, அடைக்கலம் கொண்ட நம் முக்கியரே.

2.21:
முக்கிய மந்திரம் காட்டிய, மூன்றில் நிலையுடையார் /
தக்கவையன்றித், தகாதவை ஒன்றும் தமக்கிசையார் *
இக் கருமங்கள் எமக்குளவென்னும், இலக்கணத்தால் /
மிக்கவுணர்த்தியர், மேதினி மேவிய விண்ணவரே.

2.22:
விண்ணவர் வேண்டி, விலக்கின்றி மேவும் அடிமையெல்லாம் /
மண்ணுலகத்தில், மகிழ்ந்தடைகின்றனர் * வண்துவரைக் –
கண்ணன் அடைக்கலம் கொள்ளக், கடன்கள் கழற்றிய / நம் –
பண்ணமரும், தமிழ் வேதமறிந்த பகவர்களே.

2.23:
வேதமறிந்த பகவர், வியக்க விளங்கிய சீர் /
நாதன் வகுத்த வகை பெறுநாம், அவன் நல்லடியார்க்கு *
ஆதாரமிக்க அடிமை யிசைந்து, அழியா மறை நூல் /
நீதி நிறுத்த, நிலை குலையா வகை நின்றனமே.

2.24:
நின்றனம் அன்புடைவானோர், நிலையில் நிலமளந்தான் /
நன்றிது தீயது இதென்று, நடத்திய நான் மறையால் *
இன்று நமக்கு இரவாதலின், இம்மதியின் நிலவே /
அன்றி அடிக்கடி, ஆரிருள் தீர்க்க அடியுளதே.

2.25:
உளதான வல்வினைக்கு, உள்ளம் வெருவி உலகளந்த /

*வளர் தாமரையிணை, வன்சரணுக வரித்தவர் தாம் **
*களைதானெனவெழும், கன்மம் துறப்பர் துறந்திடிலும் /*
*இளைதாம் நிலைசெக, எங்கள்பிரான் அருள் தேன் எழுமே.*

*2.26:*
*தேனுர் கமலத்திருமகள் நாதன், திகழ்ந்துறையும் /*
*வானுடு உகந்தவர், வையத்திருப்பிடம் * வன் தருமக்*
*கான் ஆர் இமயமும், கங்கையும் காவிரியும் கடலும் /*
*நானு நகரமும், நாகமும் கூடிய நன்னிலமே. (2)*

*2.27:*
*நன்னிலமாமது, நற்பகலாமது நன்னிமித்தம் /*
*என்னலுமாமது, யாதானுமாம் அங்கடியவர்க்கு **
*மின்னிலைமேனி விடும் பயணத்து, விலக்கிலதோர் /*
*நன்னிலையாம் நடுநாடு வழிக்கு, நடைபெறவே.*

*2.28:*
*நடைபெற அங்கிப் பகலொளி நாள், உத்தராயணமாண்டு /*
*இடைவரு காற்று இரவி, இரவின் பதி மின் வருணன் **
*குடையுடை வானவர் கோமான், பிரசாபதி என்றிவரால் /*
*இடையிடை போகங்களெய்தி, எழிற் பதமேறுவரே.*

*2.29:*
*ஏறி எழிற்பதம், எல்லாவுயிர்க்கும் இதமுகக்கும் /*
*நாறுதுழாய் முடி, நாதனை நண்ணி அடிமையில் நம் **
*கூறு கவர்ந்த, குருக்கள் குழாங்கள் குரை கழற்கீழ் /*
*மாறுதலின்றி, மகிழ்ந்து எழும் போகத்து மன்னுவமே.*

*2.30:*
*மன்னும் அனைத்து உறவாய், மருள் மாற்று அருள் ஆழியுமாய்த் /*
*தன்நினைவால் அனைத்தும், தரித்து ஓங்கும் தனியிறையாய் **
*இன்னமுதத்து அமுதால், இரங்கும் திருநாரணனே /*
*மன்னியவன் சரண், மற்றோர் பற்றின்றி வரிப்பவர்க்கே. (2)*

*2.31*
*வரிக்கின்றனன் பரன், யாவரையென்று மறை அதனில் /*
*விரிக்கின்றதும் குறியொன்றால், வினையரை ஆதலின் நாம் **
*உரைக்கின்ற நன்னெறி, ஓரும் படிகளில் ஓர்ந்து / உலகம்*
*தரிக்கின்ற தாரகனுர், தகவால் தரிக்கின்றனமே.*

*2.32:*
*தகவால் தரிக்கின்ற, தன்னடியார்களைத் தன்திறத்தில் /*
*மிகவாது அறஞ்செயும், மெய்யருள் வித்தகன் மெய்யுரையின் **
*அகவாய் அறிந்தவர், ஆரணநீதி நெறிகுலைதல் /*
*உகவாரென, எங்கள்தேசிகர் உண்மை யுரைத்தனரே.*

*2.33:*
*உண்மை யுரைக்கும் மறைகளில் ஓங்கிய, உத்தமனுர் /*
*வண்மை அளப்பு அரிது ஆதலின், வந்து கழல் பணிவார் **
*தண்மை கிடக்கத், தரம் அளவு என்ற இயப்பு இலதாம் /*
*உண்மை உரைத்தனர், ஓரம் தவிர உயர்ந்தனரே.*

*2.34:*
*உயர்ந்தனன் காவலன் அல்லார்க்கு, உரிமை துறந்து உயிராய் /*

மயர்ந்தமை தீர்ந்து, மற்றோர் வழியின்றி அடைக்கலமாய்ப் *
பயந்தவன் நாரணன், பாதங்கள் சேர்ந்து பழவடியார் /
நயந்த குற்றேவலெல்லாம், நாடும் நல் மனு ஓதினமே.

2.35:
ஓதும் இரண்டை இசைத்து, அருளால் உதவும் திருமால் /
பாதமிரண்டும் சரணெனப்பற்றி, நம்பங்கயத்தாள் *
நாதனை நண்ணி, நலந்திகழ் நாட்டில் அடைமையெல்லாம் /
கோதி லுணர்த்தியுடன், கொள்ளுமாறு குறித்தனமே.

2.36:
குறிப்புடன் மேவும் தருமங்களின்றி, அக்கோவலனார் /
வெறித் துளவக்கழல், மெய் அரண் என்று விரைந்தடைந்து *
பிரித்த வினைத்திரள், பின்தொடராவகை அப்பெரியோர் /
மறிப்பு உடை மன் அருள் வாசகத்தால், மருளற்றனமே.

2.37:
மருளற்ற தேசிகர், வான் உகப்பால் இந்த வையமெலாம் /
இருளற்று இறைவர், இணையடி பூண்டு உய எண்ணுதலால் *
தெருள் உற்ற செந்தொழில், செல்வம் பெருகிச் சிறந்தவர் பால் /
அருள் உற்ற சிந்தையினால், அழியா விளக்கேற்றினரே.

2.38:
ஏற்றி மனத்து எழில் ஞானவிளக்கை, இருளனைத்தும் /
மாற்றினவர்க்கு ஒருகைம்மாறு, மாயனும் காணகில்லான் *
போற்றி யுகப்பதும், புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் /
சாற்றி வளர்ப்பதும், சற்று அல்லவோ முன்னம் பெற்றதற்கே.

2.39:
முன்பெற்ற ஞானமும், மோகம் துறக்கலும் மூன்றுரையில் /
தன்பற்று அது அன்மையும், தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித்தகவும் *
மன்பற்றி நின்றவகை, உரைக்கின்ற மறையவர் பால் /
சின்பற்றியென் பயன், சீரறிவோர்க்கு இவை செப்பினரே.

2.40: *
செப்பச் செவிக்கமுது என்னத்திகழும், செழுங்குணத்துத் /
தப்பற்றவர்க்குத், தாமேயுகந்து தரும் தகவால் *
ஒப்பற்றநான்மறை, உள்ளக்கருத்தில் உறைத்துரைத்த /
முப்பத்திரண்டிவை, முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே. (2)

2.8:
திருவுடன் வந்த செழுமணிபோல், திருமாலிதயம் /
மருவிடமென்ன மலரடிசூடும், வகைபெருநாம் *
கருவுடன் வந்தகடுவினையாற்றில், விழுந்தொழுகாது /
அருவுடன் ஐந்தறிவார், அருள்செய்ய அமைந்தனரே.

2.41: *
புருடன் மணிவரமாகப் பொன்ற மூலப் /
பிரகிருதி மறுவாக மாந் தண்டாகத் /
தெருள் மருள் வாளுறையாக / ஆங்காரங்கள் –
சார்ங்கம் சங்காக, மனம் திகிரியாக *
இருடிகங்கள் ஈரைந்தும் சரங்களாக /

இருபூத மாலை வன மாலையாகக் /
கருடன் உறுவா மறையின் பொருளாம் / கண்ணன்
கரி கிரி மேல் நின்று அனைத்துங் காக்கின்றானே. (2)

2.42: *
ஆராத அருளமுதம் பொதிந்தகோயில் /
அம்புயத்தோன் அயோத்தி மன்னற் களித்தகோயில் /
தோலாத தனிவீரன் தொழுத கோயில் /
துணையான வீடணற்க்குத் துணையாங்கோயில் *
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில் /
செழுமறையின் முதலெழுத்து சேர்ந்தகோயில் /
தீராத வினையனைத்தும் தீர்க்குங்கோயில்
திருவரங்க மெனத் திகழுங்கோயில் தானே (2)

2.43: *
கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும்வெற்பு /
கடுவினையர் இருவினையும் கடியும்வெற்பு /
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு /
தெளிந்த பெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு *
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு /
பொன்னுலகிற் போக மெலாம் புணர்க்கும் வெற்பு /
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு /
வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே. (2)

2.44: *
உத்தம அமர்த் தலம் அமைத்ததோர் –
எழில்தனு / உய்த்த கணையால் /
அத்திர அரக்கன் முடி பத்துமொரு
கொத்தென / உதிர்த்த திறலோன் *
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெண்ணெய்
வைத்த துணு / அத்தனிடமாம்
அத்திகிரி பத்தர் வினை தொத்தற –
அறுக்கும் / அணி அத்தகிரியே. (2)

2.45:
எட்டு மாமூர்த்தி எண் கணன் / எண்திக் –
கெட்டிறை எண்பிரகிருதி /
எட்டு மாவரைகளீன்ற வெண்குணத்தோன் /
எட்டெணு மெண் குண மதியோர்க்கு *

எட்டுமா மலர் எண் சித்தி எண் பத்தி /
எட்டு யோகாங்கம் என் செல்வம் /
எட்டு மாகுணம் எட்டெட்டெம் எனும் கலை /
எட்டு இரதம் மேலதுவும் எட்டினவே.

2.46:
ஒண் தொடியாள் திருமகளும் தானுமாகி /
ஒருநினைவால் ஈன்ற உயிரெல்லாமுய்ய /
வண்டுவரைநகர் வாழ் வசுதேவற்க்காய் /
மன்னவற்குத் தேர்ப் பாகனாய் நின்ற *
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன /
தனித் தருமம் தானெமக்காய்த் தன்னை யென்றும் /
கண்டு களித்து அடி சூட விலக்காய் நின்ற /
கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே.

2.47:
மூண்டாலும் அரியதலின் முயல வேண்டா /
 முன்னம் அதில் ஆசை தனை விடுகை திண்மை /
வேண்டாது சரண நெறி வேறோர் கூட்டு /
 வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கி நிற்கும் *
நீண்டாகும் நிறை மதியோர் நெறியிற் கூடா /
 நின் தனிமை துணையாக எந்தன் பாதம் –
பூண்டால் / உன் பிழைகளெலாம் பொறுப்பனென்று /
புண்ணியனார் புகழனைத்தும் புகழுவோமே.

2.48:
சாதனமும் நற்பயனும் நானேயாவன் /
 சாதகனும் என் வயமாய் என்னைப்பற்றும் /
சாதனமும் சரண நெறியன்று உனக்குச் /
 சாதனங்கள் இன்னிலைக்கு ஓர் இடையில் நில்லா *
வேதனை சேர் வேறங்கம் இதனில் வேண்டா /
 வேறெல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன் /
தூதனுமாம் நாதனுமாம் என்னைப்பற்றிச் /
 சோகம் தீர் என உரைத்தான் சூழ்கின்றானே.

2.49:
தன் நினைவில் விலக்கு இன்றித் தன்னை நண்ணார் /
 நினைவனைத்தும் தான் விளைத்தும் விலக்கும் நாதன் /
என் நினைவை இப்பவத்தில் இன்று மாற்றி /
 இணையடிக் கீழ் அடைக்கலமென்று எம்மைவைத்து *
முன் நினைவால் யாம் முயன்ற வினையால் வந்த /
 முனிவு அயர்ந்து முத்திதர முன்னேதோன்றி /
நல் நினைவால் நாம் இசையும் காலம் / இன்றோ –
 நாளையோ என்று நகை செய்கின்றானே.

2.50: *
பாட்டுக்குரிய பழையவர் மூவரைப், பண்டொருகால் /
மாட்டுக்கு அருள்தரு மாயன், மலிந்து வருந்துதலால் *
நாட்டுகிருள்செக, நான்மறை அந்திநடைவிளங்க /
வீட்டுக்கிடைகழிக்கே, வெளிக்காட்டும் அம்மெய்விளக்கே. (2)

2.51: * (நடை)
உறுசகட முடையவொரு காலுற்றுணர்ந்தன /
 உடன் மருத மொடிய வொரு போதில் தவழ்ந்தன /
 உறி தடவும் அளவில் உரலோடுற்று நின்றன /
 உறு நெறியோர் தருமன் விடு தூதுக்கு உகந்தன /

மற நெறியர் முறிய பிருதானத்து வந்தன /
 மலர்மகள் கைவருட மலற் போதில் சிவந்தன /
 மறுபிறவி அறும் முனிவர் மாலுக் கிசைந்தன /
 மனுமுறையில் வருவதோர் விமானத் துறைந்தன *

அறமுடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன /
 அடல் உரக படம் மடிய ஆடிக் கடிந்தன /
 அறுசமயம் அறிவு அரிய தானத் தமர்ந்தன /
 அணிகுருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன /

வெறியுடைய துளவமலர் வீறுக்கு அணிந்தன /

விழு கரி ஓர் குமரன் என மேவிச் சிறந்தன /
விறல் அசுரர் படை அடைய வீயத் துரந்தன /
விடல் அரிய பெரிய பெருமாள் மென் பதங்களே (2)

2.52:
மறையுரைக்கும் பொருளெல்லாம் மெய்யன்று ஓர்வார் /
மன்னிய கூர் மதியுடையார் வண்குணத்தில் /
குறை உறைக்க நினைவில்லார் குருக்கள் தம்பால் /
கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நன்மை *
சிறை வளர்க்கும் சிலமாந்தர் சங்கேதத்தால் /
சிதையாத திண் மதியோர் தெரிந்தது ஓரார் /
பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும் / எங்கள்
பொன்றாத நன்னெறியில் புகுதுவாரே.

2.53:
இது வழி இன்னமுது என்றவர், இன்புலன் வேறிடுவார் /
இதுவழி ஆமல என்றறிவார், எங்கள் தேசிகரே *
இதுவழி எய்துக வென்று, உகப்பால் எம் பிழை பொறுப்பார் /
இது வழியா மறையோர் அருளால், யாமிசைந்தனமே .

2.54:
எட்டு மிரண்டு மறியாத எம்மை, இவையறிவித்து /
எட்ட வொண்ணாத இடந்தரும், எங்கள் அம் மாதவனார் *
முட்ட வினைத் திரள் மாள, முயன்றிடும் அஞ்சலென்றார் /
கட்டெழில் வாசகத்தால், கலங்கா நிலை பெற்றனமே.

2.55: *
வானுளமர்ந்தவர்க்கும், வருந்த வரும் இன் நிலைகள் /
தானுளனாய் உகக்கும், தரம் இங்கு நமக்குளதே *
கூனுள நெஞ்சுகளால், குற்றமெண்ணி இகழ்ந்திடினும் /
தேனுள பாதமலர்த், திருமாலுக்குத் தித்திக்குமே. (2)

2.56: *
வெள்ளைப் பரிமுகர்தேசிகராய், விரகாலடியோம் /
உள்ளத் தெழுதியது ஓலையில் இட்டனம், யாமிதற்கென் *
கொள்ளத் துணியினும் கோதென்று இகழினும், கூர்மதியீர் /
எள்ளத்தனையும் உகவாது இகழாது, எம் எழில் மதியே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

3. அமிருதசுவாதினி

3.1: *
மூலங் கிளையென, ஒன்றிரண்டான மொழியிரண்டும் /
மேலொன்றிலையென நின்ற, அவ்வித்தகன்தன் னுரையும் *
காலங் கழிவதன் முன்னம், கருத்துறக் கண்டிடவே /
ஞாலம் புகழும், நம் தேசிகர் தாம் நம்மை வைத்தனரே. (2)

3.2:
காரணமும் காவலனுமாகி / என்றுங்
கமலையுடன் பிரியாத நாதனை /
நாரணனுக் கடியேனை னடிமை பூண்ட /
நல்லடியார்க் கல்லான் மற்றொருவர்க் கல்லேன் *
ஆரணங்கள் கொண்டு அகமும் புறமுங் கண்டால் /
அறிவாகி யறிவதுமாய் அறு நான்கன்றிச் /
சீரணிந்த சுடர் போலத் திகழ்ந்து நின்றேன் /
சிலை விசயன் தேரனைய சிறுவேதத்தே.

3.3:
யான் எனதென்பதொன்று இல்லை, என் செய்வதவனை யல்லால் /
ஆனதறிந்திடுந், தன்னடியார்க்கு எனை யாட்படுத்தித் *
தானெனை நல்கி நடத்துகின்றான், தன்னருள் வழியே /
நானுனை வீடு செய்வேனென்ற, நந்திரு நாரணனே.

3.4:
யாதாமிவை யனைத்தும், படைத்தேந்து மிறைவனுமாய்க் /
கோதாம் குணங்களுடன், குறுகாத குணத்தனுமாய் *
மாதா பிதாவென, மன்னுறவாய்க் கதியென்ன நின்றான் /
போதார் திருவுடன், பொன்னருள் பூத்த நம் புண்ணியனே.

3.5:
இருவிலங்கு கழித்திடராம் உடலந்தன்னில் /
இலங்கு நடு நாடியினலெம்மை வாங்கி /
ஒருவிலங்கு நெறியல்லா வழியால் மன்னு /
முயர் வானிலேற்றி யுயிர் நிலையுந் தந்து *
பெருவிலங்காம் அருள் தன்னால் தன்னடிக்கீழ்ப் /
பிரியாத அமரருடன் பிணைத்துத் தன்னார் /
உருவில் அங்கு மிசைவிக்கு மும்பர் போகம் /
உகந்து தருந் திருமாலை யுகந்தோ நாமே.

3.6:
உறவை யிசைந் திறையில்லா வொருவற் கென்றும் /
ஒண் சுடரா யோரெழுத்தி லோங்கி நின்றோம் /
துறவறமுந் தூமதியுந் துயரந் தீர்வும் /
தூயவர்கட் கானமையு மிரண்டிலுற்றோம் *
அறமுயலு மனைத்துறவா யனைத்து மேந்தும் /
அம்புயத்தாள் கணவனை நாமணுகப் பெற்றோம் /
பிறவியறுத் தடிசூடி யடிமையெல்லாம் /
பிரியாத அமரருடன் பெற்றோ நாமே.

3.7
கருமமென ஞானமென அதனாற் கண்ட /

உயிர் கவருங் காதலெனக் கானிலோங்கும் /
அருமறையால் தரு நிலையில் இன்றுளெல்லாம் /
அடியேனை அலையாத வண்ண மெண்ணித் *
தருமம் உடையார் உரைக்க யானறிந்து /
தனெக்கென்று அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித் /
திருமகளோடு ஒருகாலும் பிரியா நாதன் /
திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே.

3.8:
வினைவிடுத்து வியன் குணத்தா லெம்மையாக்கி /
வெருவுரைகேட்டு அவைகேட்க விளம்பி நாளுந் /
தனை யனைத்தும் அடைந்திடத் தானடைந்து நின்ற /
தன் திரு மாதுடன் இறையுந் தனியா நாதன் *
நினை வழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கும் /
நிகரில்லா நெடுங்குணங்கள் நிலைபெறத் / தன் –
கனை கழற் கீழ் அடைக்கலமாக் காட்சி தந்து /
காரணனும் தன் காவல் கவர்கின்றனே.

3.9:
என்னது யான் செய்கின்றேனென்று தாருக்கு /
இன்னடிமை தந்தளிப்பான் இமையோர் வாழும் /
பொன்னுலகில் திருவுடனே யமர்ந்த நாதன் /
புனலாரும் பொழிலரங்கன் திகழ மன்னித் *
தன் அகலம் அகலாத தகவாலோங்கும் /
தகவுடனே தன் கருமந் தானே யெண்ணி /
அன்னையென அடைக்கலங் கொண்டஞ்சல் தந்து / என் –
அழலாற நிழலார அளிக்கின்றனே.

3.10:
ஒண்டொடியாள் திருமகளுந் தானுமாகி /
ஒரு நினைவாலீன்ற உயிரெல்லாம் உய்ய /
வண்துவரை நகர் வாழ் வாசுதேவற்காய் /
மன்னவற்குத் தேர்ப்பாகனாகி நின்ற *
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன /
தனித் தருமன் தான் எமக்காய்த் தன்னையென்றுங் /
கண்டு களித்து அடி சூட விலக்காய் நின்ற /
கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றனே.

3.11:
துய்யமனத்தர், துறையணுகாத துணையிலியேன் /
ஐயமறுத்து உனதாணை, கடத்த லகற்றினை நீ *
கையமர் சக்கரக், காவல் காக்குந் திருவருளால் /
வையமளந்த வடிக்கீழ், அடைக்கலம் வைத்தருளே.

3.12:
அறியாத இடைச்சி யருமறியும் வண்ணம் /
அம்புயத்தாளுடன் அந்நாள வதரித்த /
குறையாதுமில்லாத கோவிந்தா நின் /
குரைகழற் கீழடைக் கலமாங் குறிப்புத் தந்தாய் *
வெறியாரு மலர்மகளு நீயும் விண்ணில் /
விண்ணவர்கள் அடி சூட இருக்கு மேன்மை /
குறையாத வினை யகற்றி யடிமை கொள்ளக் /
குறுகவொரு நன்னாள் நீ குறித்திடாயே.

3.13:
தத்துவமுஞ் சாதனமும் பயனுங்காட்டுந் /
தாரம் முதல் இரு நான்கும் தன் கருத்தால் /
முத்தி வழி நாமுயலும் வகையே காண /
முகுந்தனிசைத் தருள் செய்த ஐந்நாலெந்தும் *
பத்தி தனிற் படிவில்லார் பரஞ்சுமத்தப் /
பார்த்தன் தேர் முன்னே தான் தாழ நின்ற /
உத்தமனுர் உத்தம நல்லுரை நாலெட்டும் /
உணர்ந்தவர் தாமுகந்தெம்மை உணர்வித்தாரே.

3.14:
பரக்கும் புகழ்வரும், பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய் /
இரக்கின்றவர்க் கிவையீந்தால், அறமுள தென்றியம்பார் *
கரக்குங் கருதுடை, தேசிகர் கன்றென நமையெண்ணிச் /
சுரக்குஞ் சுரவிகள்போல், சொரிகின்றனர் சொல்லமுதே.

3.15:
சோகந்தவிர்க்கும், சுருதிப் பொருளொன்று சொல்லுகின்றோம் /
நாகந் தனக்கு மிராக்கதற்கும், நமக்குஞ் சரணம் *
ஆகண்டலன் மகனுகிய, ஆவலிப்பேறிய / ஓர் –
காகம்பிழைத்திடக், கண்ணழிவே செய்த காகுத்தனே.

3.16:
ஒருக்காலே சரணுக அடைகின்ருற்கும் /
உனக்கடிமை ஆகின்றேன் என்கின்ருற்கும் /
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும் /
அஞ்சேலென்றருள் கொடுப்பன் இதுதான் ஓதும் *
இருக்காலும் எழில் முனிவர் நினைவினுலும் /
இவையறிவார் செயலுடன் என் இசை வினுலும் /
நெருக்காத நீள் விரதம் எனக்கொன்று என்னும் /
நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலை பெற்றோமே.

3.17:
பொன்னை யிகழ்ந்து விருகங்கள், புல்லிய புல்லுகந்தான் /
மன்னரெடுப்பது அப்பொன்னலதே, மன்னுலகனைத்துந் *
தன்னையடைந்திடத், தானருள் செய்யுந் தனிச் சிலையோன் /
பொன்னடி நாமடைந்தோம், புறமார் ஒன்கொல் செய்திடினே.

3.18:
வேதத்திரளின் விதியுணர்ந்தோர்கள், விரித்துரைத்த /
காதற் கதியையும், ஞானத்தையுங் கருமங்களையும் *
சாதிக்கவல்ல சரணுகதி, தனிநின்ற நிலை /
ஓதத்தொடங்கும் எழுத்தின் திறத்தில், உணர்மின்களே.

3.19:
மூவுலகுந்தன் பிழையைத் தானே சாற்ற /
முனிவர்களுந் தேவர்களு முனிந்த வந்நாள் /
தாவரி தாயெங்கும் போய்த் தளர்ந்து வீழ்ந்த /
தனிக்காகன் தானிரந்த வுயிர்வழங்கிக் *
காவலினி யெமக்கெங்குங் கடன் என்றெண்ணிக் /
காண நிலை இலச்சினை அன்றிட்ட வள்ளல் /
ஏவல் பயன் இரக்கம் இதற்காறு என்றோதும் /
எழிலுடையார் இணையடிக் கீழிருப்போ நாமே.

3.20:
திருத்தம் பெரியவர், சேருந் துறையில் செறிவிலர்க்கு /
அருத்தங் கழிந்த, வழியருளென்ற நம் மண் மகளார் *
கருத்தொன்ற, ஆதிவராக முரைத்த கதி யறிவார் /
பொருத்தந் தெளிந்துரைக்கப், பொய்யிலா மதிபெற்றனமே.

3.21:
இடம்பெற்று ரெல்லா மென்னுடலாய் நிற்ப /
இடர்ப் பிறப்பென்றிவை இல்லா என்னை அன்பால் /
அடம் பற்றும் அவனென்று நினைந்தான் யாவன் /
அவனுவி சரியும் போது அறிவு மாறி *
உடம் பிற்றூர் உபலம் போற் கிடக்க நானே /
உய்யும்வகை நினைந் துயர்ந்த கதியால் / எந்தன்
இடம்பெற்றேன் உடன்வாழ வெடுப்பன் என்ற /
எம்பெருமான் அருள் பெற்று மருள் செற்றோமே.

3.22:
இரண்டு உரையாத, நம் மேன முரைத்த உரையிரண்டின் /
திரண்ட பொருள்கள், தெளிந்தடி சூடினம் திண்ணருளால் *
சுருண்ட நல் ஞானச் சுடரொளி, சுற்றும் பரப்பதன் முன் /
புரண்டது நம்வினை, போமிடம் பார்த்து இனிப் போமளவே.

3.23:
மலையும் குலையும் என்றெண்ணியும், வன் பெரும் புண் திரங்கித் /
தலையும் வெளுத்த பின், தானே யழிய விசைகின்றிலீர் *
அலையுங்கடல் கொண்ட, வையமளித்தவன் மெய்யருளே /
நிலையென்று நாடி, நிலை நின்ற பொய்ம் மதி நீக்குமினே.

3.24:
கண்ணன் கழல் தொழக், கூப்பியகையின் பெருமைதனை /
எண்ணங் கடக்க, யமுனைத் துறைவர் இயம்புதலால் *
திண்ணமிது வென்று, தேறி தெளிந்தபின் சின்மதியோர் /
பண்ணும் பணிதிகள் பாற்றிப், பழந்தொழில் பற்றினமே.

3.25:
பொங்கு புனலாறுகளிர் புவனமெல்லாம் /
பொற் கழலால் அளந்தவன்றன் தாளால் வந்த /
கங்கையெனு நதிபோலக் கடல்களேழில் /
கமலி பிறந்து அவனுகந்த கடலேபோலச் *
சங்குகளில் அவனேந்துஞ் சங்கே போலத் /
தாரிலவன் தண் துளவத்தாரே போல /
எங்கள் குலபதிகளிவை மேலாம் என்றே /
எண்ணிய நல்வார்த்தைகள் நாமிசைகின்றோமே.

3.26:
சீர்க்கடலின் திரையென்னத் தகவால்மிக்க /
தேசிகராய்த் திண்ணருளாங் கடலை நீக்கிப் /
பாற்கடலோன் திருவணையாய் நின்று / பாரங்
காணுத பவக்கடலைக் கடத்துகின்றான் *
ஈர்க்கு மரக்கல மென்ன இறைவரின்பம் /
எழுந் தழியுங் குமிழியென இகந்தொழிந்தோம் /
ஆர்க்கினி நாமென் கடவோ நமக்கும் ஆரென்
கடவாரென்று / அடைந்தவர்கட்கு அறிவித்தோமே.

3.27: *
காசினியின் மணியனைத்துங் காயா வண்ணன் /
கடைந்தெடுத்த கவுத்துவத்தின் சீர்மைக்கொவ்வா /
காசி முதலாகிய நன் நகரியெல்லாம் /
கார் மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா *
மாசில் மனந்தெளி முனிவர் வகுத்த வெல்லாம் /
மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக் கொவ்வா /
வாசி அறிந்திவை உரைத்தோம் வையத்துள்ளீர் /
வைப்பாக இவை கொண்டு மகிழ்மினீரே. (2)

3.28: *
அந்தமிலாப் பேரின்ப மருந்த வேற்கும் /
அடியோமை அறிவுடனே என்றும் காத்து /
முந்தை வினை நிரை வழியில் ஒழுகாது எம்மை /
முன்னிலையாந் தேசிகர் தம் முன்னே சேர்த்து *
மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி /
வழிப்படுத்தி வானேற்றி அடிமை கொள்ளத் /
தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் /
தலை வைத்தோம் சடகோபன் அருளினாலே. (2)

3.29:
தான் தனக்குத் தன்னாலே தோன்றித் / தன்னேர் –
ஒளி யணைக்குங் குணத்தாலுந் தன்னைக் கண்டு /
தான் தனக்கென் றறியாத தன்குணத்தைத் /
தன் குணத்தால் தானிறையில் தானே கூட்டி *
ஊன் மருத்துப் புலன் மன மான் ஆங்காரங்கள் /
ஒருமூலப் பிரகிருதி யன்றி நின்ற /
நான் தனக்குத் தான் தனக் கென்றிசைவு தந்த /
நாரணனை நான்மறையால் நான் கண்டேனே.

3.30:
கழியாத கருவினையிற் படிந்த நம்மைக் /
காலமிது வென்றொரு காற் காவல் செய்து /
பழியாத நல்வினையிற் படிந்தார் தாளில் /
பணிவித்துப் பாசங்களடைய நீக்கிச் *
சுழியாத செவ் வழியில் துணைவரோடே /
தொலையாத பேரின்பந் தர மேலேற்றி /
அழியாத அருளாழிப் பெருமான் செய்யும் /
அந்தமிலா உதவியெலாம் அளப்பார் ஆரே.

3.31: *
நின்னருளாங் கதியன்றி மற்றொன்று இல்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன் /
உன்னருளுக்கு இனிதான நிலையுகந்தேன் /
உன் சரணே சரணென்னுந் துணிவு பூண்டேன் *
மன்னிருளாய் நின்ற நிலையெனக்குத் தீர்த்து /
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை /
இன்னருளால் இனி எனக்கோர் பரமேற்றுமல் /
என் திருமால் அடைக்கலங்கொள் என்னை நீயே. (2)

3.32:
பரவு மறைகளெலாம், பதஞ் சேர்ந் தொன்ற நின்ற பிரான் /
இரவன்றி இரவியின், கலத் தழைத்த எழிற்படையோன் *
அரவுங் கருடனு மன்புடனேந்தும், அடியிரண்டும் /

தர எந்தமக்கு அருளால், தளரா மனந் தந்தனனே.

3.33: *
அலர்ந்த அம்புயத் திருந்து தேனருந்தி இன்னகல் /
அல்குலார் அசைந் தடைந்த நடை கொளாத தனமெனே /
நலந் தவிர்ந்ததால் அதென்கொல் நாவின் வீறு இழந்ததால் /
நா வணங்கு நாதர் தந்த நாவின் வீறு இழந்த தென் *
சலந் தவிர்ந்து வாது செய்து சாடி மூண்ட மிண்டரைச் /
சரிவிலேன் எனக் கனைத்து உறைத்த வேதிராசர் தம் /
வலம் தரும் கை நாயனர் வளைக் கிசைந்த கீர்த்தியால் /
வாரி பாலது ஆம் என்று மாசில் வாழி வாழியே. (2)

3.34:
சடையன் திறல் அவர்கள், பெருஞானக் கடல் அதனை /
இடை அமிழாது கடக்கினும், ஈதளவு என்று அறியார் *
விடையுடன் ஏழ் அன்று அடர்த்தவன், மெய்யருள் பெற்ற நல்லோர் /
அடைய வறிந்துரைக்க, அடியோமும் அறிந்தனமே.

3.35:
பாவளருந் தமிழ்மறையின் பயனே கொண்ட /
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில் /
காவலனுங் கணவனுமாய்க் கலந்து நின்ற /
காரணனைக் கறுத்துற நாம் கண்டபின்பு *
கோவலனுங் கோமானுமான அந்நாள் /
குரவை பிணை கோவியர் தம் குறிப்பே கொண்டு /
சேவலுடன் பிரியாத பெடைபோற் சேர்ந்து /
தீவினையோர் தனிமை எலாந் தீர்ந்தோம் நாமே.

3.36: *
ஆதிமறையென வோங்கும் அரங்கத்துள்ளே /
அருளாருங் கடலைக் கண்டவன் நம்பாணன் /
ஓதியதோர் இரு நான்கும் இரண்டுமான /
ஒரு பத்தும் பற்றுக வுணர்ந்து உரைத்தோம் *
நீதியறியாத நிலை அறிவார்க் கெல்லாம் /
நிலையிதுவே என்று நிலை நாடி நின்றோம் /
வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் /
விதையாகும் இதுவென்று விளம்பினோமே. (2)

3.37: *
காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்று இன்றிக் /
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதற் /
பாண்பெருமாளருள் செய்த பாடல் பத்தும் /
பழமறையின் பொருளென்று பரவுகின்றோம் *
வேண் பெரிய விரிதிரை நீர் வையத்துள்ளே /
வேதாந்த ஆரியன் என்றியம்ப நின்றோம் /
நாம் பெரியோம் அல்லோம் நாம் நன்றுந் தீதும் /
நமக்குரைப்பார் உளரென்று நாடுவோமே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

*சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.*

*4. பரமபதசோபானம்*

*சிறப்புத்தனியன்*

*vyajIkrutya vimukti saidha padavi sopana sadvarNanam*
*sArIraArNava ratna jAtam iha yaprAcikasat sarvasa: |*
*tasmin tishtati venkatesvara kavou sribhAshyakaropame*
*yam kancit purusham hi upAsitum ye mAgA mana: svasta te ||*

*thasmai namostu gurave tAdrusa vibhavAya venkatesAya |*
*prAvartayat n~ynAnAm bhUmou parama pada harmya sopAnam ||*

*தேனேறு தாமரையாள், திருமார்பன் தன் /*
*திண்ணருளால் அவனடியில் விவேகம் பெற்றிங்கு /*
*ஊனேறு பவக்குழியை வெறுத்ததற் பின் /*
*ஊர் விரத்தியுடன், வினையின் திரளுக் கஞ்சிக் /*
*கூனேறு பிறை இறையோன் சாபந் தீர்த்தான் /*
*குரைகழலே சரணடைந்து குரம்பை விட்டு /*
*வானேறும் வழிப்படிகள் அடைவே கண்ட /*
*வண்புகழ்த் தூப்புல் வள்ளலருள் பெற்றோமே.*

*4.1: **
*அடற்புள் அரசினும், அந்தணர் மாட்டினும் / இன்னமுதக்*
*கடற்பள்ளி தன்னினுங், காவிரி யுள்ளம் உகந்த பிரான் **
*இடைப் பிள்ளையாகி யுரைத்த துரைக்கும், எதிவரனார் /*
*மடைப்பள்ளி வந்த மணம், எங்கள் வார்த்தையுள் மன்னியதே. (2)*

*4.2:*
*கள்ள மனத்துடன், கண்டு முயன்ற கடுவினையால் /*
*நள்ளிருள் ஆழியில், நல்சுவை ஐந்தென நாடியவோர் **
*அள்ளலில் நாளும், விழுந்தழி யாவகை யாரணநூல் /*
*வள்ளல் வழங்கிய, வான் படியான வழியிதுவே.*

*4.3:*
*அருவுருவானவை யனைத்தும் அறிவாரேனும் /*
*அருங்கலைகள் கற்றுரைக்க, வல்லாரேனும் /*
*தருமவழி யழியாமற், காப்பாரேனும் /*
*தனிமறையின் தாத்பரியந் தருவாரேனும் **
*இருவினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது /*
*இங்கே நாம் சிறையிருந்த ஈனந் தீர்க்கும் /*
*திருமகளார் பிரியாத தேவன் திண்ணம் /*
*தேருதார் திண்படியில் ஏறாதாரே.*

*4.4:*
*மறுத்தார் திருவுடன், மார்பில் தரித்தவன் வாசகத்தை /*
*மறுத்தார் மயக்கமும், மற்றதனால் வந்த மாநரகும் **
*நிறுத்தார் பவத்தில், நெடு நாளும் உழன்றமை கண்டதனால் /*
*வெறுத்து ஆரண நெறியே, வெள்கியோட விரைவர்களே.*

*4.5:*

வான்பட்ட மன்னிருளில் மயங்குமாறும் /
மறித்தொரு காலெனை யூழி சென்றால் அன்றோர் /
ஊன்பட்ட வுடலாழி வினை யொழுக்கில் /
ஒருகரையுங் காணுதே யொழுகு மாறும் *
தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற /
சிறுபயனே உறுபயனென்ற உருந்துமாறும் /
நான்பட்ட படியிங் நேர் தானே கண்டு /
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே.

4.6:
உலகத்துயர்ந்தவர், ஒன்றும் பயனில் உறும் துயரும் /
அலகிற்படாத, அப்போகங் கவர்ந்தெழும் அம்புயத்தோன் *
கலகத் தொழில் மதுகைடபரால், படுங் கட்டமெண்ணில் /
பலகற்ற மெய்யடியார், படியார் இக்கடும் பவத்தே.

4.7:
தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க /
தார் வேந்தர் தொழ வையமாண்டார் மாண்டார் /
சந்திரனுஞ் சூரியனும் வீயுங்காலம் /
தாரகையின் வடமும் அற்றுத் தனி வானும் *
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும் /
ஈரிரண்டு முகத்தானுமில்லா வங்நாள் /
நந்திருமால் நிலைகண்டார் நாகமெல்லாம் /
நரகென்று நற்பதமே நாடுவாரே.

4.8:
துறவறமே துணிவார், துணுக்கற்ற விளந்துணிவோர் /
உறவிலர் ஆதலின், நாம் உயர்ந்தாருடன் ஒன்றி நின்றோம் *
மறவழி மாற்றி, எம் மையலைத் தீர்த்தவர் மன்னருளால் /
கறவையுகந்த பிரான், கழல் சூடுங் கருத்தினமே.

4.9:
வந்தனபோல் வருவனவும் அனந்தமாகி /
மாளாத துயர் தருவல் வினை நெருப்புக்கு /
இந்தனமாய் எண்ணிறந்த காலமெல்லாம் /
இன்னமும் இப்பவக்குழிக்கே யிழியா வண்ணம் *
வெந்ததொரு குழவியை நற்குமரனுக்கும் /
வெறித் துளவ வித்தகனுர் விதியே கொண்டார் /
பந்தனமாம் அவை யனைத்தும் பாறுகைக்குப் /
பழ மறையின் பரம நெறி பயிலுவாரே.

4.10:
கருமாலையில் வரும், கட்டங் கழிக்குங் கருத்துடையார் /
ஒருமால் பெருகும், யோகில் முயன்றும் அதன்றியும் நம் *
திருமாலடியிணை, திண் சரணுகுமென வரித்தும் /
தருமாலினியவை தானேயெனத், தக வெண்ணுவரே.

4.11:
முஞ்செய்த வினைத்திரளின் முளைத்த தன்றி /
முற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில் /
தன்செய்ய திருவருளா லிசைவு பார்த்துத் /
தழல்சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப் *
பின் செய்த வினையில் நினைவொன்றுது ஒன்றும் /

பிழைபொருத்து வேறுளது விரகால் மாற்றும் /
என் செய்ய தாமரைக்கண் பெருமாந் எண்ணம் /
எண்ணுதர் எட்டிரண்டு மெண்ணு தாரே.

4.12:
உறையிட்ட வாளென, ஊனுள் உறையும் உயோகியரை /
நறை மட்டு ஒழிவற்ற, நல் துளவு ஏந்திய நாயகன்தன் *
இறை மட்டிலாத, நெடும்பயன் காட்ட, நினைந்துடலச் /
சிறைவெட்டி விட்டு, வழிப்படுத்தும் வகை செய்திடுமே.

4.13:
முன் கருவி யீரைந்தும் மனத்திற்கூட்டி /
முக்கியமா மருத்திலவை சேர்த்து அதெல்லாம் /
நன்குணரும் உயிரினிற் சேர்த்து ஐம்பூத்ததை /
நண்ணுவித்துத் தான் தன் பால்வைக்கு நாதன் *
ஒன்பதுடன் வாசலிரண்டு உடைத்தாய் உள்ளே /
ஒரு கோடி துயர் விளைக்கு முடம்பா யொன்றும் /
வன் சிறையின் தலைவாசல் திறந்து நம்மை /
வானேற வழிப்படுத்த மனமுற்றானே.

4.14:
தெருளார் பிரமபுரத் திறை சேர்ந்து, இடந்தீர்ந்தவர் தாம் /
மருளார் பிரமபுரச் சிறை தீர்ந்தபின் வந்தெதிர்கொண்டு *
அருளால் அமரர் நடத்த, இம்மாயயை கடந்த தற்பின் /
சுருளார் பவநரகச் சுழல், ஆற்றின் சுழ்ற்சியிலே.

4.15:
விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர் /
மேனியல்லால் வில்லில்லை மீனவற்கு /
மொழியல்லால் அமுதில்லை யென்றுமுன்னாள் /
முத்திவழி முனிந்தடைந்த மோகந் தீர்ந்தோம் *
கழியல்லாற் கடலில்லை யென்பார் போலக் /
காரியமே காரண மென்றுரைப்பார் காட்டும் /
வழியல்லா வழி யெல்லங் கடந்தோம் / மற்றும்
வானேறும் வழிகண்டோம் மகிழ்ந்திட்டோமே.

4.16:
வன்பற்றுடன் மயல் பூண்டு, மற்றோர் கதியால் இனநாள் /
என்பற்றது பெறுந் தானமும், எத்தனை போதுளதாம் *
துன்பற்ற தந்துணிவால், துயர் தீர்க்குந் துழாய் முடியான் /
இன்புற்ற நல்வழியால், ஏற்று நற்பத மெண்ணுவமே.

4.17:
பண்டை யிருவினையாற்றிற் படிந்து / பாரங்
காணாதே யொழுகிய நாம் பாக்கியத்தால் /
வண்டமரு மலர் மாதர் மின்னாய் மன்ன /
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான் சேர் *
கொண்டலருள் மழை பொழிய வந்த தொப்பாம் /
குளிர்ந்து தெளிந்த அமுதாய விரசை யாற்றைக் /
கண்டு அணுகிக் கருத்தாலே கடந்து / மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாங் கதித்திட்டோமே.

4.18:

பூ வளருந் திருமாது புணர்ந்த, நம்புண்ணியனூர் /
தாவளமான தனித்திவம் சேர்ந்து, தமருடனே *
நாவளரும் பெருநான் மறை, யோதிய கீதமெல்லாம் /
பா வளருந் தமிழ்ப், பல்லாண்டு இசையுடன் பாடுவமே.

4.19:
அடல் உரக முண்டுமிழ்ந்த அருக்கன் போல /
அழுக்கடைந்து கழுவிய நற்றரளம் போலக் /
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போலக் /
காட்டு தீக் கலந் தொழிந்த களிறேபோல *
மடல் கவரு மயல் கழிந்த மாந்தர்போல /
வஞ்சிறைபோய் மன்னர் பதம் பெற்றூர்போல /
உடன் முதலா வுயிர்மறைக்கும் மாயைநீங்கி /
உயர்ந்த பதமேறி யுணர்ந் தொன்றினோமே.

4.20: *
மண்ணுலகில் மயல்தீர்ந்து மனந்ததும்பி /
மன்னாத பயனிகந்து மாலேயன்றிக் /
கண்ணிலது என்றஞ்சி அவன் கழலே பூண்டு /
கடுஞ்சிறை போய்க் கரையேறுங் கதியேசென்று *
விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு /
விண்ணவர்தங் குழாங்களுடன் வேதம்பாடிப் /
பண்ணுலகிற் படியாத இசையால் பாடும் /
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே. (2)

4.21: *
மாளாத வினையனைத்தும் மாளநாம் போய் /
வானேறி மலர்மகளார் அன்பு பூணும் /
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு /
தொழுது உகந்து தோத்திரங்கள் பாடியாடிக் *
கேளாத பழமறையின் கீதங்கேட்டுக் /
கிடையாத பேரின்பம் பெருக / நாளும்
மீளாத பேரடிமைக்கன்பு பெற்றோம் /
மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

5. பரமதபங்கம்

sanskrit thaniyan

5.1: *
எண் தள வம்புயத்துள், இலங்கும் மறுகோண மிசை /
வண் பணிலந்திகிரி, வளைவில் வளைவாய் முசலம் *
திண்கையில் அங்குசம் சீர், திகழுங் கதை செங்கமலம் /
எண்படையேந்தி நின்றான், எழிலாழி யிறையவனே. (2)

5.2: (ஒய்யார நடை சந்தம்)
விடு நெறியஞ்சி விடத் தொடக்கிய,
விதியரடைந்து தொழத் தழைத் தெழு /
விழியருள் தந்து விலக் கடிக்களை,
விரகி லியம்பி விலக்கி வைத்தனர் /

கொடுவினை யென்பதனைத் தினைத் தனை,
கொணர்தல் இகந்த குணத் தனத்தினர் /
குருகையில் வந்து கொழுப் படக்கிய,
குலபதி தந்த குறிப்பில் வைத்தனர் *

கடு நரகன் புகழற்றி மற்றொரு,
கதிபெறும் அன்பில் எமைப் பொருத்தினர் /
கமலை யுகந்த கடற் கிடைக்கடல்,
கருணை யுயர்ந்த திடர்க் கொருக்கினர் /

படு முதலின்றி வளர்த்த நற்கலை,
பலபல வொன்ற வெமக் குரைத்தனர் /
பழ மறையந்தி நடைக் கிடைச்சுவர்,
பர மதமென்ற திடித்த பத்தரே.

5.3:
போமுரைக்கும் பொருள் யாமறியோம், பொருளார் மறையில் /
தாமுரைக்கின்றன, தாமே யறியுந் தரமுடையார் *
ஆமுரைக் கென்றிவை யாய்ந்தெடுத்து, ஆரண நூல் வழியே /
நாமுரைக்கும் வகை, நல்லருளேந்தி நவின்றனரே.

5.4:
சித்தும் அசித்தும் இறையுமெனத், தெளிவுற்று நின்ற /
தத்துவ மூன்றும், தனித் தனி காட்டுந் தனி மறையால் *
முத்தி வழிக்கிது மூலமெனத், துணிவார்களையும் /
கத்தி மயக்கும், கதகரை நாங் கடிகின்றனமே.

5.5:
முத்தின் வடங்களென, முகுந்தன் புனை மூவகையாம் /
சித்தில் அலரும் சுருதிச், செவ்வை மாறிய சிந்தைகளால் *
பத்திலிரண்டு மெய்க்கப், பகட்டும் பரவாதியர்தம் /
கத்தில் விழுந்தடைந்த, அவ் அழுக்கின்று கழற்றினமே.

5.6:
நாக்கியலும் வகை, நம்மையளித்தவர் நல்லருளால் /

பாக்கியமேந்திப், பரனடியார் திறம் பார்த்த தற்பின் *
தாக்கியர் தங்கள் தலைமிசை தாக்கித், தனிமறைதான் /
போக்கியம் என்றதனில், பொய்ம் மதங்களைப் போக்குவமே.

5.7:
தீவகை மாற்றி அன்றோர், தேரிலாரணம் பாடிய / நம்
தேவகி சீர் மகனார், திறம் பாவருள் சூடியநாம் *
மூவகை யாமறியாத், தத்துவத்தின் முக மறிவார் /
நாவகையே நடத்தும், நடைபார்த்து நடந்தனமே.

5.8:
வேலைப் புறம் அகங்காண்பது போல், வேத நன்னெறிசேர் /
நூலைப் புறம் அகங் காண்டலில், நுண்ணறிவின்றி நின்றீர் *
மாலைப் பெற வழிகாட்டிய, தேசிகர் வாசகமே /
ஓலைப்புறத்தி லெழுதுகின்றோம், உள்ளெழுதுமினே.

5.9:
சிறை நிலையாம் பவத்தில், சிறு தேனின்ப முண்டுழல்வார் /
மறைநிலை கண்டறியா, மயல் மாற்றிய மன்னருளே *
துறைநிலை பாரமெனத், துளங்கா அமுதக் கடலாம் /
இறைநிலை யாமுரைத்தோம், எங் குருக்கள் இயம்பினவே.

5.10:
வெறியார் துளவுடை, வித்தகன் தன்மையின் மெய்யறிவார் /
குறியார் நெடியவரென்று, ஒருகுற்றம் பிறர்க்குரையார் /
அறியார் திறத்தி லருள்புரிந்து, ஆரண நன்னெறியால் /
சிறியார் வழிகள் அழிப்பதும், தீங்கு கழிப்பதற்கே.

5.11:
மிண்டுரைக்க விரகு தருந் தருக்கங் கொண்டே /
வேண்டுங்கால் வேண்டுவதே விளம்புகின்றார் /
கண்டதற்கு விபரீதங் கத்துகின்றார் /
காணாத குறை மறையில் காட்ட நிற்பார் *
பண்டொருத்தன் கண்டுரைத்தேன் நானேயென்னப் /
பலவகையில் உபாதிகளாற் படிந்து வீழ்வார் /
கொண்டல் ஒக்குந் திருமேனி மாயக் கூத்தன் /
குரைகழல் சேர் விதிவகையிற் கூடாதாரே.

5.12:
கண்டது மெய்யெனில், காணா மறையிலறிவு கண்டோம் /
கண்டது அலாதது இலது எனில், கண்டிலம் குற்றம் இதில் *
கண்டது போல் மறைகாட்டுவதும், கண்டது ஒத்ததனால் /
உண்டதுகேட்கும், உலோகாயதர் ஒன்று மீறுவதே.

5.13:
கண்டதனாற் காணாதது அனுமிக்கின்றார் /
கண்டு ஒருத்தன் உரைத்ததனைக் கவருகின்றார் /
உண்டு பசி கெடுமென்றே உணர்ந் துண்கின்றார் /
ஒன்றாலே யொன்றைத் தாஞ் சதிக்கின்றார் *
பண்டு முலையுண்டதனால் முலையுண்கின்றார் /
பார்க்கின்றார் பலவல்லாத் தம்மை மற்றும் /
கண்டு மதி கெட்ட நிலை காணகில்லார் /
காணாதது இலதென்று கலங்குவாரே.

5.14:
காணதது இலதெனுங் கல்வி யினுரைக், கடிந்ததற் பின் /
கோணர் குதர்க்கங்கள் கொண்டே, குழப்பும் பவுத்தர்களில் *
நாணதனைத்து மிலதென்றும், நால் வகையன்றி தென்றும் /
வாணளறுக்கின்ற, மத்திமத்தான் வழிமாற்றுவமே.

5.15:
மானம் இலை மேயமிலை யென்றும் மற்றோர் /
வாத நெறியிலை யென்றும் வாது பூண்ட /
தானுமிலை தன்னுரையும் பொருளுமில்லை /
தத்துவத்தின் உணர்த்தி சயமில்லையென்றும் *
வானவருமான வருமனமும் வெள்க /
வளம்பேசுமதி கேடன் மத்திமத்தான் /
தேன நெறி கொண்டனைத்துந் திருடா வண்ணம் /
செழுமதி போலெழு மதியாற் சேமித்தோமே.

5.16:
முற்றுஞ் சகத்திலதென்றே, பகட்டிய முட்டரை நாம் /
சுற்றுந் துறந்து, துறையில் நின்றே துகளாக்கியபின் *
மற்றொன்றிலது மதி பலவுண்டென்று, வஞ்சனையால் /
சற்றுந் துறந்த, யோகாசரனைச் சதிக்கின்றனமே.

5.17:
உளக்கதியை நாமுள்ளி யுள்ளந்தேறி /
உலகத்தார் உகந்து இசைய உலகுண்டென்றோம் /
இளக்க அரிதாகிய நல் தருக்கஞ் சேர்ந்த /
எழின்மறையில் ஈசனுடன் எம்மைக் கண்டோம் *
விளக்கு நிரை போல் மதிகள் வேறாய் / வேறொன்
றறியாதே விளங்குமென விளம்புகின்ற /
களக் கருத்தன் கண்ணிரண்டும் அழித்தோம் / நாணக்
காகம்போல் திரிந்தவன் என் கதறுமாறே.

5.18:
பொருளொன்று இலதென்று, போதமொன்று கொண்ட பொய்யரை நாம் /
தெருள்கொண்டு தீர்த்த பின், காண வொண்ணப் பொருள் தேடுகின்ற *
மருள் கொண்ட சூதுரைக்கும், சௌத்திராந்திகன் வண்ணிக்கை நாம் /
இருள் கொண்ட பாழ்ங்கிணறென்று, இகழ்ந்தோட வியம்புவமே.

5.19:
நிலையில்லாப் பொருள் மதியை விளைத்துத் தான்சேர் /
நிரங்கொடுத்துத் தானழியும், தன்னால் வந்த /
நிலையில்லா மதி தன்னில் நிறத்தைக் காணும் /
இதுகாணும் பொருள் காண்கையென்ற நீசன் *
முலையில்லாத் தாய்கொடுத்த முலைப்பாலுண்ணும் /
முகமில்லா மொழியெனவே மொழிந்த வார்த்தை /
தலையில்லாத் தாள் ஊருங் கணக்காய் நின்ற /
கட்டளை நாங் கண்டின்று காடினேமே.

5.20:
காண்கின்றவனிலை, காட்சியுங் கண்டதுமுண்டு அவைதாம் /
எண் கொண்டன வன்று, இவற்றிற் குணமு நிலையு மிலை *
சேண் கொண்ட சந்ததியால், சேர்ந்து மொன்றென நிற்க்குமென்ற /

கோண் கொண்ட கோளுரை, வைபாடிகன் குறைகூறுவமே.

5.21:
கும்பிடுவார் ஆரென்று தேடுகின்றார் /
 குணங்களையுந் தங்களுக்குக் கூறுகின்றார் /
தம்படியைத் தமர்க் குரைத்துப் படிவிக்கின்றார் /
 தமக் கினிமேல் வீடென்று சாதிக்கின்றார் *
தம் புடவை உணல் குறித்து நெடிதெண்கின்றார் /
 சந்ததிக்குத் தவம் பலிக்கத் தாம் போகின்றார் /
செம்படவர் செய்கின்ற சிற்றினிப்பைச் /
 சேவகப் பற்றுடனே நாம் செகுத்திட்டோமே.

5.22:
வேதங்கள் மௌலி விளங்க, வியாசன் விரித்த நன்நூல் /
பாதங்களான பதினாறில், ஈசன் படி மறைத்துப் *
பேதங்களில்லையென்று, ஓர் பிரமப் பிச்சு இயம்புகின்ற /
போதங் கழிந்தவனைப், புத்தர் மாட்டுடன் பூட்டுவமே.

5.23:
பிரிவில்லா இருளொன்று பிணக் கொன்றில்லாப் /
 பெருவெயிலை மறைத்து உலகங் காட்டுமென்ன /
அறிவில்லா அறிவொன்றை அவித்தை மூடி /
 அகம்புறமென்று இவையனைத்தும் அமைக்குமென்பார் *
செறிவில்லாப் புத்தருடன் சேர்ந்து கெட்டார் /
 சீவனையும் ஈசனையுஞ் சிதைக்கப் பார்த்தார் /
நெறியில்லா நேர்வழியுந் தானேயானான் /
 நெடுமாலை நாமடைந்து நிலைபெற்றோமே.

5.24:
சோதனை விட்டு ஒருத்தன் சொல, மெய்யெனச் சோகதரைச் /
சேதனை யற்றவரென்று, சிதைத்தபின், சீவர்கட்கோர் *
வேதனை செய்கை வெறும் மறமென்று, விளம்பிவைத்தே /
மாதவமென்று மயிர் பறிப்பார், மயல் மாற்றுவமே.

5.25:
சொன்னார் தாம் சொன்னதெலாந் துறவோ மென்றும் /
 சொன்னதுவே சொன்னது அலதாகுமென்றும் /
தின்னாதுந் தின்னுமதும் ஏகமென்றும் /
 சிறியனுமாம் பெரியனுமாஞ் சீவனென்றும் *
மன்னாது மன்னுமது மொன்றேயென்றும் /
 வையமெலாம் விழுகின்ற தென்று மென்றும் /
தென்னாடும் வடநாடுஞ் சிரிக்கப் பேசும் /
 சினநெறியார் சினமெல்லாஞ் சிதைத்திட்டோமே.

5.26:
ஏகாந்திகம் ஒன்றுமில்லையென்று, ஆசையைத் தாமுடுப்பார் /
சோகாந்தமாகத் துறப்புண்டபின், தொழில் வைதிகமென்று *
ஏகாந்திகள் சொன்ன, ஈசன் படியில் விகற்பமெண்ணும் /
லோகாந்த வீணர்தம், வேதாந்த வார்த்தை விலக்குவமே.

5.27:
ஒன்றெனவும் பலவெனவுந் தோற்றுகின்ற /
 உலகெல்லா மொரு பிரமந்தானே யாக்கி /

நன்றெனவுந் தீதெனவும் பிரிந்தவெல்லாம் /
நன்றன்று தீதன்றே என நவின்றுர் *
கன்றும் அலர் பசுவும் அராகி நின்றே /
கன்ருகிப் பசுவாகி நின்றவண்ணம் /
இன்று மறை மாட்டுக்கு ஓரிடையனை /
ஏகாந்தி யிசைந்திட நாமியம்பினேமே.

5.28:
சாயா மறைகளில், சத்தந் தெளிந்திடச் சாற்றுதலால் /
தூயார் இவரென்று, தோன்ற நின்றே பல சூதுகளால் *
மாயா மதமும் மறு சின வாதும், பவுத்தமும் சேர் /
வையாகரணர் சொல்லும், மறு மாற்றங்கள் மாற்றுவமே.

5.29:
கலகத்திற் கலங்கி வருங் காணிக்கெல்லாம் /
கண்ணுறு சதிர வழிகட்டுவார் போல் /
உலகத்தில் மறை சேர்ந்த வுரைகள் தம்மால் /
ஒரு பிழையுஞ் சேராமல் உபகரித்தார் *
பல கத்தும் பவுத்தர் முதலான பண்டைப் /
பகற் கள்ளர் பகட்டழிக்கப் பரவும் பொய்யாம் /
சிலகற்றுச் சித்தாந்த மறியகில்லாச் /
சிறுவரினி மயங்காமற் சேமித்தோமே.

5.30:
கண்டது அலாதன கட்டுதலால், கண்ட விட்டதனுல் /
பண்டுளதான மறைக்குப், பழமையை மாற்றுதலால் *
கொண்டது மீசனைக், கொள்ளா வகையென்று கூறுதலால் /
கண்டகராய் நின்ற, காணுதர் வாதங் கழற்றுவமே.

5.31:
ஆகமத்தை அனுமான மென்கையாலும் /
அழியாத மறையழிக்க நினைத்தலாலும் /
போக மற்றொரு பலம் போற் கிடக்கை தானே /
புண்ணியர்க்கு வீடென்று புணர்த்தலாலும் *
மாகமொத்த மணிவண்ணன் படியை மாற்றி /
மற்றவனுக்கொரு படியை வகுத்தலாலும் /
காகமொத்த காணுத தன் கண்ணை வாங்கிக் /
காக்கைக்கு ஆர் என்று அலறக் காட்டினேமே.

5.32:
கோதம நூல்களைக், குற்றமிலாவகை கூட்டலுமாம் /
கோது கழித்து ஒருகூற்றிற், குணங்களைக் கொள்ளவுமாம் *
யாது மிகந்து, ஒருநீதியை யாமே வகுக்கவுமாம் /
வேதியர் நல் நய வித்தரமென்பது, மெய்யுளதே.

5.33:
நான் மறைக்குத் துணையாக நல்லோரெண்ணும் /
நாலிரண்டில் ஒன்றுன நய நூல்தன்னில் /
கூன்மறைத்தல் கோது உளது கழித்தல் மற்றோர் /
கோணுத கோதில் வழி வகுத்தலன்றி *
ஊன்மறைத்த வுயிரொளி போலொத்த தொவ்வாது /
உயிரில்லாக் காணுத முரைத்தவெல்லாம் /
வான்மறைக்க மடிகோலும் வண்ணமென்றோம் /

மற்றிதற்கார் மறுமாற்றம் பேசுவாரே.

5.34:
ஈசனும் மற்றணங்கும் இலதென்று, எழில் நான்மறையில் /
பேசிய நல்வினையால், பெரும் பாழுக்கு நீரிறைக்கும் *
நீசரை நீதிகளால், நிகமாந்தத்தின் நூல் வழியே /
மாசின் மனங்கொடுத்தும், மறுமாற்றங்கள் மாற்றுவமே.

5.35:
கனைகடல் போலொரு நீராஞ் சூத்திரத்தைக் /
கவந்தனையும் இராகுவையும் போலக்கண்டு /
நினைவுடனே நிலைத் தரும மிகந்து நிற்கும் /
நீசர் நிலை நிலைநாடவண்ண மெண்ணி *
வினைபரவு சைமினியார் வேதநூலை /
வேதாந்த நூலுடனே விரகாற் கோத்த /
முனையுடைய முழுமதி நம் முனிவர் சொன்ன /
மொழிவழியே வழியென்று முயன்றிட்டோமே.

5.36:
முக்குணமாய் நின்ற, மூலப் பிரகிருதிக்கு அழியா /
அக்குணமற்ற அரு துணை, மற்றதற்கு ஈசனிலை *
இக் கணனைப்படி ஐ யைந்து மெண்ணில், முன் முத்தியென்னும் /
பக்கணவீணர், பழம்பகட்டைப் பழுதாக்குவமே.

5.37:
ஈசனிலன் என்பதனால் என்றுஞ் சீவர் /
எங்குமுளர் இலர் உணர்வை யென்றவத்தால் /
பாசமெனும் பிரகிருதி தன்னால் என்றும் /
பலமுமிலை வீடுமிலை யென்னும் பண்பால் *
காசினி நீர் முதலான காரியங்கள் /
கச்சபத்தின் கால்கை போலென்னுங் கத்தால் /
நாச மலதிலைகாணும் ஞாலத்துள்ளீர் /
நாமிசையாச் சாங்கியத்தை நாடுவார்க்கே.

5.38:
தாவிப் புவனங்கள், தாளிணை சூட்டிய தந்தை யுந்திப் /
பூவிற் பிறக்கினும், பூதங்களெல்லாம் புணர்த்திடினும் *
நாவிற் பிரிவின்றி, நாமங்கை வாழினும் நான்மறையிற் /
பாவித்த தன்றி யுரைப்பது, பாறும் பதர்த்திரளே.

5.39:
காரணனா யுலகளிக்குங் கண்ணன் தேசைக் /
கண்ணாடி நிழல் போலக் காண்கையாலும் /
தாரணையின் முடிவான சமாதி தன்னைத் /
தனக்கேற்றும் விளக்கென்று தனிக் கையாலும் *
காரணமாம் அதுதனக்குப் பயனும் சீவன் /
கைவலிய நிலையென்று கணிக்கையாலும் /
கோரணியின் கோலமெனக்குக் குறிக்கலாகும் /
கோகனகத்து அயன் கூறுஞ் சமயக் கூறே.

5.40:
சாதுசனங்களெலாம், சச்சையென்னும் சலம் புணர்த்தார் /
கோதம சாபமொன்றால், கொடுங் கோலங்கள் கொண்டுலகில் *

பூத பதிக் கடியாரென நின்று, அவன் பொய்யுரையால் /
வேதமகற்ற நிற்பார், விகற்பங்கள் விலக்குவமே.

5.41:
மாதவனே பரனென்று வையங்காண /
மழுவேந்தி மயல் தீர்க்க வல்லதேவன் /
கைதவம் ஒன்று உகந்தவரைக் கடியசாபம் /
கதுவியதால் அதன் பலத்தைக் கருதிப் பண்டை *
வேத நெறி யணுகாது விலங்குதாவி /
வேருக விரித்துரைத்த விகற்பமெல்லாம் /
ஓதுவது குத்திரத்துக்கு என்றுரைத்தான் /
ஓதாதே யோதுவிக்கும் ஒருவன்தானே.

5.42:
கந்த மலர்மகள் மின்னுங் காரார் மேனிக் /
கருணை முகில் கண்ட கண்கள் மயிலாய் ஆலும் /
அந்தமில் பேரின்பத்தில் அடியரோடே /
அடிமையெனும் பேரமுதம் அருந்தி வாழத் *
தந்த மதியிழந்து அரனர் சமயம் புக்குத் /
தழல் வழிபோய்த் தடுமாறித் தளர்ந்து வீழ்ந்தீர் /
சந்த நெறி நேரறிவார் சரணஞ் சேர்ந்து /
சங்கேதத்து அவம் முனிவீர் தவிர்மினீரே.

5.43:
யாது மிலாத வன்றும், யவர்க்குந் நன்றியெண்ணிய / நம்
மாதவனர் வதனத்து அமுதுண்ணும், வலம்புரிபோல் *
வாதுகளால் அழியா மறை, மௌலியின் வான்பொருளே /
ஓதிய பஞ்சாத்திர முகவாரை, ஒழுக்குவமே.

5.44:
பூ அலரும் திருஉந்திப் புனிதன் வையம் /
பொன்னடி யாலளந்து இருவர் போற்றிநின்ற /
நாவலருங் கலைகளெலாந் தன்னை நாட /
நாடாத நன்னதியா நணுகு நாதன் *
கோவலனய் நிரையளித்த நிறைபோல் வேதங் /
கோவாகக் கோமானய் தன் பால்சேர்த்துக் /
காவலிது நல்லுயிருக் கென்று காட்டும் /
கார்த்தயுகக் கதி கண்டோங் கரை கண்டோமே.

5.45:
நமக்கார் துணையென, நாம் என்று அருள் தரு நாரணனர் /
உமக்கு ஆறு இவையென்று அடியிணை காட்ட, உணர்ந்தடையும் *
எமக்கோர் பரமினியில்லாது, இருவினை மாற்றுதலில் /
தமக்கே பரமென்று, தர முயலும் தரம் சாற்றுவமே.

5.46:
பலத்திலொரு துவக்கற்ற பதவிகாட்டிப் /
பல்லுயிருந் தடுமாறப் பண்ணுகின்ற /
கலித்திரளின் கடுங் கழுதைக் கத்து மாற்றிக் /
கண்ணுடையார் கண்டுரைத்த கதியைச் சொன்னேம் *
வலத்து இலகு மறுவொன்றல் மறுவொன்றில்லா /
மாமணியாய் மலர் மாதர் ஒளியாம் அந்நல் /
நலத்திலொரு நிகரில்லா நாதன் பாதம் /

நல் வழியாம் அல்வழக்கார் நடத்துவாரே.

5.47:
எல்லார்க்கு மெளிதான வேற்றத்தாலும் /
இனியுரைக்கை மிகையான விரக்கத்தாலும் /
சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும் /
துணிவரிதாய்த் துணைதுறக்குஞ் சுகரத்தாலும் *
கல்லார்க்குங் கற்றூர் சொற் கவர்தலாலும் /
கண்ணனுரை முடிசூடி முடித்தலாலும் /
நல்லார்க்குந் தீயார்க்கும் இதுவே நன்றும் /
நாரணற்கே யடைக்கலமாய் நணுகுவீரே.

5.48:
பண்டைமறைக்குப், பகையென நின்ற பரமதங்கள் /
கொண்டவர் கொள்ளும், பயன் ஒன்றிலதெனுங் கூர் மதியால் *
வண் துவரைக்கு அரசான, நம்மாயனை வானுலகிற் /
கண்டு களிப்பதெனும், காதலொன்றைக் கருதுவமே.

5.49:
கலந்திகழும் போகங்கள் கண்டுவெள்கிக் /
காரியமுங் காரணமுங் கடந்து நாம் போய்க் /
குலந்திகழுங் குருக்களடி சூடி மன்னுங் /
குற்றவேல் அடியவர் தங்குழாங்கள் கூடி *
வலந் திகழுந் திருமகளும் மற்றிடத்தே /
மன்னிய மண் மகளாரும் நீளையாரும் /
நலந்திகழ வீற்றிருந்த நாதன் பாதம் /
நமக்கு இதுவே முடியென்ன நண்ணினேமே.

5.50:
மானங்களின்றி வகுத்துறைக்கின்ற, மதங்களெலாம் /
தானங்களன்று, தரும நெறிக்கென்று சாற்றியபின் /
வானங் கவர்ந்து, மறைமுடி சூடிய மாதவத்தோர் /
ஞானங்களொன்ற நடக்கின்ற, நல்வழி நாடுவமே.

5.51:
தன்னடிக்கீழ் உலகேழையும் வைத்த, தனித்திருமால் /
பொன்னடிக்கு ஏற்கின்ற, புண்ணியர் கேண்மின், புகலறிவார் *
முன்னடி பார்த்து முயலுதலால், அவர் சாயையெனப் /
பின்னடி பார்த்து நடந்து, பெரும் பதமேறுவமே.

5.52:
வையமெலாம் இருள் நீக்கு மணிவிளக்காய் /
மன்னிய நான் மறைமௌலி மதியே கொண்டு /
மெய்யலது விளம்பாத வியாசன் காட்டும் /
விலக்கில்லா நல்வழியே விரைந்து செல்வீர் *
ஐயமற அறுசமயக் குறும்பறுத்தோம் /
அணியரங்கர் அடியவர்க்கே அ டிமை செய்தோம் /
மையகடல் வட்டத்துள் மற்றுந் தோற்றும் /
வாதியர்தம் வாய்ப்பகட்டை மாற்றினேமே.

5.53: *
கோதவ மொன்றில்லாத தகவேகொண்ட /
கொண்டலென வந்துலகில் ஐவர்க்கன்று ஓர் /

தூதுவனையொரு கோடி மறைகளெல்லாம் /
தொடர்ந் தோடத் தனியோடித் துயரம் தீர்த்த *
மாதவனார் வட கொங்கில் வானி யாற்றின் /
வண்ணிகை நன்னடங் கண்டு மகிழ்ந்து வாழும்
போது / இவை நாம் பொன்னயிங்தை நகரில் முன்னாள் /
புணராத பரமதப் போர் பூரித்தோமே. (2)

5.54: * (ஒய்யார ண்டை சந்தம்)
திகிரி மழுவுயர் குந்தம் தண்டு அங்குசம் பொறி /
சிதறு சதமுக அங்கி வாள் வேல் அமர்ந்ததும் /
தெழி பணிலம் சிலை கண்ணி சீரங்க செவ்வடி /
செழிய கதை முசலம்தி சூலந் திகழ்ந்ததும் /

அகில உலகுகள் கண்டை யாய் ஓர் அலங்கலில் /
அடைய அடைவில் இலங்க ஆசு இன்றி நின்றதும் /
அடியும் அருகணையும் ஆம் அரவு என்ன நின்று / அடி
அடையும் அடியாரை அன்பினல் அஞ்சலென்பதும் *

மகிழுமமரர் கணங்கள், வானங் கவர்ந்திட /
மலியும் அசுரர் புணர்த்த மாயந் துரந்ததும் /
வளரும் அணி மணி மின்ன வான் அந்தி கொண்டிட /
மறை முறை முறை வணங்க மாறின்றி வென்றதும் /

சிகி இரவி மதியம் உமிழ் தேசு உந்த எண் திசைத் /
திணி மருள் செகவுகந்து சேமங்கள் செய்ததும் /
திகழரவணை அரங்கர் தேசு என்ன மன்னிய /
திரி சுதர்சனர் செய்ய ஈர் எண் புயங்களே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

6. மெய்விரதமான்மியம்

sanskrit thaniyan

6.1: *
வாழியருளாளர், வாழியணியத்திகிரி /
வாழியெதிராசன் வாசகத்தோர் * வாழி
சரணுகதியெனுஞ், சார்வுடன் மற்றொன்றை /
அரணுகக் கொள்ளாதார் அன்பு. (2)

6.2:
எண்டிசையுங் கடலேழு மலைகளேழும் /
ஈரேழு வையகமும் படைத்து இலங்கும் /
புண்டரிகத்தயன் புணர்த்த பெரிய வேள்விப் /
புனித நறும் போக்கியத்தை உவந்து வந்து *
தொண்டையெனும் மண்டலத்தின் நடுவிற் பாரில் /
தூ நில மெய்விரதத்துத் தோன்றிநின்ற /
கொண்டலருட் குணமே நாம் கூறுகின்றோம் /
கூர் மதியீர் குறியாகக் கொண்மீனீரே.

6.3:
வம்மின் புலவீர் அருளாளப் பெருமாளென்றும், அருளாழி
யம்மானென்றும் / திருமகளைப் பெற்றும் என்னெஞ்சங் கோயில் கொண்ட,
பேரருளாளரென்றும் * வியப்ப விருதூதும்படி கரை புரண்ட,
கருணைக்கடலை / இவ்வண்ணம் பேசுவீர், ஈதென்ன பாங்கே.

6.4:
ஒன்றே புகலென்று, உணர்ந்தவர் காட்டத் திருவருளால் /
அன்றே அடைக்கலங்கொண்ட, நம் அத்திகிரித் திருமால் *
இன்றேயிசையின் இணையடி சேர்ப்பர், இனிப் பிறவோம் /
நன்றே வருவதெல்லாம், நமக்கு பரமொன்றிலதே.

6.5:
வம்பவிழ் போதமர் மாதருகந்த, அம்மா நிதியைத் /
தன்பலமே கொண்டு, காணக் கருதிய தாமரையோன் *
முன்பல குற்றத்து, வல்வினை மொய்க்க முகிழ் மதியாய் /
அம்புலி வேண்டிய, பாலனைப் போல அழுதனனே.

6.6:
அடங்காக் கரணங்கள், ஐந்துடனுறு மடக்கி முனம் /
நெடுங்கால மின்னிலமே, நிலையாப் பூண்டு நீடுறைவான் *
சடங்காற் பெரிய தவங்கள் செய்தேன், என்ன தன்மையிதென்று /
இடங் காத்திருந்த, திசைமுகன் தன்னை யிகழ்ந்தனனே.

6.7:
விண்ணுலகில் வீற்றிருந்த மேன்மையாலும் /
வேதங்களீரிரண்டும் விரித்தலாலும் /
கண்ணனை நான் கருத்துறவே காண்பனென்னக் /
காணுமல் விலக்கிய தன் வினையைக்காணு *
எண்ணிய நல் புவனங்கள் ஏழுமாறும் /

இருமூன்று தீவமும் எட்டிடமும் விட்டுப் /
பண்ணிய நல்விரதமெலாம் பலிக்குமென்று /
பாரதத்திற் பங்கயத்தோன் படிந்திட்டானே.

6.8:
எத்திசை நிலனுமெய்தி, அருந்தவஞ் செய்தவந் நாள் /
சத்திய விரதஞ் செல்வாய் என்ற, ஓருரையின் சார்வால் *
அத்திசை சென்றழைத்து, அங்கமரர் இல்லெடுப்பான் தன்னை /
உத்திரவேதி செய்யென்று, உரை அணங்கிறை யுரைத்தான்.

6.9: : (ஒய்யார நடை சந்தம்)
உத்தம வமர்த் தலமமைத்த தோரெழில்தனு, வினுய்த்த கணையால் /
அத்தி வரக்கன் முடிபத்து மொரு கொத்தென, வுதிர்த்த திறலோன் *
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெணெய் வைத்த துணு, மத்தனிடமாம் /
அத்திகிரி பத்தர்வினை தொத்தற வறுக்கு, மணி யத்திகிரியே.

6.10:
திண்மணிகள் பொன்னுடனே சேர்தலாலும் /
சிதையாத நூல் வழியிற் சேர்த்தியாலும் /
வண்மையெழு மீரிரண்டு வருணத்தாலும் /
வானவர்க்கும் வியப்பான வகுப்பினாலும் *
ஒண்மையுடை வாசி விளி யோசையாலும் /
ஒருகாலு மழியாத அழகினாலும் /
மண்மகளார்க்கு அலங்காரமென்ன / மன்னு
மதிட் கச்சி நகர் கண்டு மகிழ்ந்திட்டானே.

6.11:
காமங்கள் பல கொண்ட வேதங்கொண்டு /
கைதவமே செய்வார்க்குக் காணகில்லாப் /
பூமங்கை கேள்வனை நான் கண்டு போற்றப் /
புண்ணியத்தில் நிகரில்லா விரதம் பூண்டேன் *
சாமங்கள் கழிவதன் முன் சடக்கெனப்போய்த் /
தன்னூற்றில் தனி யிருந்து தவஞ்செய்கின்ற /
நாமங்கை வந்திட நீயழைப் பாயென்று /
நன்மகனை நான்முகன்தான் நவின்றிட்டானே.

6.12: (ஒய்யார நடை சந்தம்)
அன்ன வடிவாள் அசையும், அன்ன நடையாள் உயரும்,
அன்ன அரசு ஏறிவருவாள் /
அத்தன் அயன் அத்தனயன், உத்திதனை இது அத்து என,
உத்தி புரியாள் /
நன்னடை விடா, நட மிதென்ன நடவா நடுவு நண்ணு,
குவடு ஏறி யிழிவாள் /
நற்பதிகள், அல் பதிகள், கற்புரள வற்புத,
மருற் கதியினால் *
கல் நடை விடா, இடம் இல் உன்னதி சிறு,
விகடம் மன்னு கிரி கூடம் இடியக் /
கட்டு அவ்விடை, யிற்று விழ முற்றும் விழி,
முற்றும் அடைய விட்டு அருகுற /
அன்னனய சீர், அயன் இது என் என,
விழாவமரர் மன்னு பதியேறி மகிழ /
அச்சுதன் அணைத் தனுவில் அத்திசை வரத்,
தகைய அற்று அணுகினாள்.

6.13:
அன்றுநயந்த, அயமேதமா வேள்வி /
பொன்ற உரையணங்கு, பூம்புனலாய்க் * கன்றிவர
ஆதி யயனுக்கு, அருள்செய்தணை யானுன் /
தாதை யரவணையான் தான்.

6.14:
தரணியில் மன்னி அயனுர், தனித் தவங் காத்தபிரான் /
கருணையெனுங் கடலாடித், திருவணை கண்டதற் பின் *
திரள் நரகெண்ணிய, சித்திரகுத்தன் தெரித்து வைத்த /
சுருணையிலேறிய, சூழ்வினை முற்றுந் துறந்தனமே.

6.15:
சுகலேசம் எண்ணிய, சூழ்வினை தீர்க்கத் துணிந்து அயனுர் /
அகலாத அன்புடன் கொண்ட, அயமேத வேதியின்மேல் *
புகலோங்கு பொன்மலையன்ன ஓர், புண்ணிய கோடியுடன் /
பகலோன் பகல் விளக்காகப், பரஞ்சுடர் தோன்றியதே.

6.16:
பெருமையுடை யத்திகிரிப் பெருமாள்வந்தார் /
பேராத அருள் பொழியும் பெருமாள் வந்தார் /
அருமறையினுச்சிதனில் நின்ருர் வந்தார் /
அங்கமுடன் அவையாகும் அரியோர் வந்தார் *
திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார் /
திருவருளாற் செழுங்கலைகள் தந்தார் வந்தார் /
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார் /
வானேற வழிதந்தார் வந்தார் தாமே.

6.17:
அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார் /
ஆனைபரி தேரின்மேலழகர் வந்தார் /
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார் /
கருத வரந்தரு தெய்வப் பெருமாள் வந்தார் *
முத்திமழை பொழியு முகில் வண்ணர் வந்தார் /
மூலமென வோலமிட வல்லார் வந்தார் /
உத்திர வேதிக்குள்ளே யுதித்தார் வந்தார் /
உம்பர்தொழுங் கழலுடையார் வந்தார்தாமே.

6.18: * (ஒய்யார நடை சந்தம்)
இரு பரிதியேய்ந்த மகுடமும் /
எழின்மதி திகழ்ந்த வதனமும் /
இருவகை யிலங்கு குழைகளில் /
எதிர் பொர வுகந்த மகரமும் /
ஒரு தக வுயர்ந்த திருமகள் /
ஒளி மறுவி மன்னு மகலமும் /
உரு அரு உமிழ்ந்த உதரமும் /
உலகடைய நின்ற கழல்களும் *

மருவினிடை பொங்கு புனலென /
மலை குனிய நின்ற மலையென /
மருளற விளங்கும் ஒளியென /
மலர் அயனுகந்த பயனென /

அருவில் உறைகின்ற உயிரென /
அடியவர் உகந்த அமுதென /
அருமறைகள் ஒன்றி யடிதொழ /
அருள் வரதர் நின்ற பெருமையே. (2)

6.19: (வேக or அதி ஒய்யார நடை சந்தம்)
சித்தசித்தென விரித் துரைத்தன,
அனைத் தமைத் துறையு மிறைவனுர் /
சிறிய பெரிய வுருவுடைய உவுடலமென,
நடலம் இலது இலகு நிலையினுர் /

சித்திரத் தெழிலை யொத்த பத்தரொடு,
முத்தர் பித்தியெனும் உணர்வினுர் /
சிதைவில் மறைநெறியில் எறிய வுருமுறைகள்
முறிய சிறை யரிய நிறைவினுர் /

கத்து விக்க வல கத்து வித்தை வழி
கற்றவர்க்கு அசைவில் மறையினுர் /
கபிலர் கண சரணர் சுகதர் சமணர் அரர்,
வழிகள் அழியம் அருள் மொழியினுர் /

கத்து இலக்கிலும் அருக் குலத்திலும்,
அசித்தில் ஒக்குமொரு முதல்வனுர் /
கரணம் இடுகடிய பதினேர் இருடிகமும்
அடைய முடியும் அடி இருடியார் *

ஒத்து அனைத்து உலகும் ஒற்றி யொற்றிவரும்,
இப் பவத்திசையும் இசைவினுர் /
உருவ மருவமெனு முலகின் மூடுகு இலதில்
உவமை இலது இலகு தலைவனுர் /

உத்தமப் படி வகுத்த வித்தைகளில்,
உத்தரிக்க உணர் குணவனுர் /
உரிய கிரிசைகளில் அரியதொரு விரகு,
தெரிய விரையுமவர் பரிவினுர் /

சத்து அசத்தெனும் அனைத் அணைத்த வினை,
தொத்து அறுக்க வல துணிவினுர் /
சரியுமளவில் உரியவரை அறிவு அரிய,
தமனி நெறி செருகு விரகினுர் /

தத்துவத் திரள் உதைத்து உதைத்து அடைவு,
தத்துவுக்கும் அவர் தலைவனுர் /
தருகை யுணருமவர் சரணம் அணுகவிடல்,
அரிய அருள் வரதர் அடியமே.

6.20:
திருமகள் மண்மகள் நீளை முதலா / எல்லாத்
தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்கத் /
தருமமிரு மூன்று முதலனைத்துன் தோன்றத் /
தன்னனைய சூரியர் தன்னடிக் கீழ் வாழ *
அருமறை சேர் அளவில்லா அவனியின் கண் /
அரவணை மேல் வீற்றிருப்பான் அனைத்துங் காக்கும் /

கருமணியைக் கரிகிரி மேற் கண்டேன் / என்தன்
 கடுவினைகள் அனைத்தும் நான் கண்டிலேனே.

6.21: (வேக or அதி ஒய்யார நடை சந்தம்)
பெடை இரண்டை ஓரனம் அடைந்து
 பிரிந்திடா வகை பேசலாம் /
பெருகும் அருவிகள் அருகு மருவிய
 பெரிய மணிவரை பயிலலாம் /

பிடி யிரண்டொடு களவ மொன்று
 பிணைந்த பேரழகு ஓதலாம் /
பிரிவில் ஒளியொடு நிழலும் அருகுறும்
 இரவி இலகுதல் பரவலாம் *

கொடி யிரண்டொடு விடவி யொன்று
 குளிர்ந்த வாறு குலாவலாம் /
குறைவு இல் சுருதியு நினைவும் இலகிய
 தரும அரு நிலை யென்னலாம் /

அடி யிரண்டையும் அடையுமன்பர்
 அறிந்த பேரருளா ளனூர் /
அணுகு மலர் மகள் அவனி மகளொடு
 கரடி கிரியினில் அவிர்தலே. /

6.22:
வேரொப்பார் விண் முதலாங் காவுக் கெல்லாம் /
விழியொப்பார் வேதமெனுங் கண் தனக்குக் /
காரொப்பார் கருணைமழை பொழியு நீரால் /
கடலொப்பார் கண்டிடினுங் காணக் கூத்தால் *
நீரொப்பார் நிலமளிக்குந் தன்மை தன்னால் /
நிலமொப்பார் நெடும் பிழைகள் பொறுக்கு நேரால் /
ஆரொப்பாரிவர் குணங் களனைத்துங் கண்டால் /
அருளாளர் தாம் எனினுந் தமக் கொவ்வாரே.

6.23:
எந்நிலமுங் குரத்தால், குறிசெய்த எழிற் பரிகொண்டு /
அனனமுயர்த்த செய்யோன், அன்று வேள்வி செய் வேதியின் மேல் *
முன்னிலையாகிய மூர்த்தியுடன், நான்முக மற்றுமுனக்கு /
என்ன வரன் தருவோமென்று, நாதனியம்பினனே.

6.24:
சென்று மலர்பறித்து, எங்நாதன் சேவடிப் போதுகந்து /
நன்றெனு நீர்சுடர், நன்முக வாசமிலை கொடுத்துக் *
கன்னல் இலட்டுவத்தோடு, அன்னஞ் சீடை கறிபடைத்துப் /
பின்னுஞ்செவித்து அவன்பாதம், பணிமின்கள் என்றனனே.

6.25:
ஆழிநிலை வினைகடிவான், அயமேத முடித்த தற்பின் /
வேழமலை நாயகனூர், விடை கொடுக்க விண்ணேறி *
நாழிகையில் வானவரை, மாற்றியிடு நானமுமகன்தான் /
ஊழியொலாம் அழியாத, உயோகம் அடைந்திருந்தானே.

6.26:
ஆதி யுகத்தயன் கண்டிட நின்ற, அருள்வரதர் /
காதலுயர்ந்த களிற்றைத், திரேதையிற் காத்தளித்து *
வாதுயர் தேவ குருவுக் கிரங்கித், துவாபரத்தில் /
சோதி யனந்தன், கலியில் தொழுதெழ நின்றனரே.

6.27: *
புண்டரீக முயிர்த்த புராணனுர் /
பொய்யில் மாமக வுத்தர வேதியில் /
கொண்டல் ஆர் அருள் மாரி பொழிந்திடல் /
கொண்டது ஓர் உயர் கூர் மதியன்பினுல் *
பண்டை நான் மறை மௌலி படிந்தயான் /
பாரில் மெய்விரதக் கவி பாடினேன் /
தொண்டை மண்டல வேதியர் வாழவே /
தூய தென் மறை வல்லவர் வாழவே. (2)

6.28: *
உய் விரதம் ஒன்றின்றி அடைந்தாருய்ய /
ஒரு விரதந்தான் கொண்ட வுயர்ந்த மாலைச் /
செய் விரதம் ஒன்றுலுந் தெளியகில்லச் /
சிந்தையினுல் திசை படைத்த திசை முகன்தான் *
பொய்விரத நிலமெல்லாம் போயே மீண்டு /
புகலிதுவே புண்ணியத்துக்கென்று சேர்ந்த /
மெய்விரத நன்னிலத்து மேன்மையேத்தி /
வேதாந்த வாசிரியன் விளங்கினுனே (2)

6.29: *
சீராருந்தூபுல், திருவேங்கடமுடையான் /
தாரருளாளர் தாள் நயந்து * சீராக
மெய்விரத நன்னிலத்து, மேன்மையிது மொழிந்தான் /
கையிற் கனிபோலக் கண்டு. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

8. அருத்தபஞ்சகம்

8.1: *
அமலன் அவியாத சுடர், அளவில்லா ஆரமுதம் /
அமல உருக்குணங்கள், அணி ஆயுதங்கள் அடியவர்கள் *
அமல அழியாத நகர், அழிந்தெழுங் காவுடன் எல்லாம் /
கமலை உடன் அரசாளும், கரிகிரிமேற் காவலனே. (2)

8.2:
உள்ள பொருளனைத்துக்கும், உருவ நிலை கருமங்கள் /
தெள்ளிசைவின் வசமாக்கித், திகழ்ந்து உயிரா யுறைகின்றான் *
நள்ளிருள் தீர்த்த அடியவர்க்கு, நலங் கொடுக்குந் திருவுருடனே /
வள்ளல் அருளாளரெனும், வாரண வெற்பிறையவனே.

8.3:
பூதவுடல் புலன்கள் மனம், புல்லாவி புந்தியெனும் /
யாதும் அலனாய் இலகி, யானெனும் இன் நுண்ணறிவாய்ச் *
சேதனனாய் அடிமையுமாம், உயிர்க்கெல்லாந் திண்ணுயிராய்த் /
தீதலின்றித் திகழும் சீர், அத்திகிரித் திருமாலே.

8.4:
தானடைத்த குணங்கருவி, தங்கிரிசை வழியொழுக்கி /
ஊனெடுத்து உண்டுமிழ்ந்துழலும், உயிர்க் கெல்லாமுயிராகிக் *
கானடத்திக் கமலையுடன், கண்டுகந்து விளையாடும் /
தேனெடுத்த சோலைகள் சூழ், திருவத்தியூரானே.

8.5:
உய்யும் உறவு இசையாதே, ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப் /
பொய்யுருவைத் தமக்கேற்றிப், புலன் கொண்ட பயனே கொண்டு *
ஐயுறவும் ஆரிருளும், அல்வழியும் அடைந்தவர்க்கு /
மெய்யருள் செய்திடும் திருமால், வேழ மலை மேயவனே.

8.6:
விதை முளையின் நியாயத்தால், அடியில்லா வினையடைவே /
சதையுடல நால்வகைக்கும், சரணளிப்பானெனத் திகழ்ந்து *
பதவியறியாது, பழம்பாழில் உழல்கின்றார்க்கும் /
சிதைவிலருள் தரும் திருமால், திருவத்தி நகரானே.

8.7:
எம நியம ஆசனங்கள், இயலாவி புலனடக்கம் /
தமதறியுந் தாரணைகள், தாரை அறா நினைவொழுக்கம் *
சமமுடைய சமாதி நலம், சாதிப்பார்க்கு இலக்காகும் /
அமரர் தொழும் அத்திகிரி, அம்புயத்தாளாரமுதே.

8.8:
புகலுலகில் இல்லாது, பொன்னருள் கண்டுற்றவர்க்கும் /
அகிலகில்லா அன்பர்க்கும், அன்றே தன்னருள் கொடுத்துப் *
பகலதனால் பழங்கங்குல், விடிவிக்கும் பங்கயத்தாள் /
அகலகில்லேனென்றுறையும், அத்திகிரி யருள்முகிலே.

8.9:
இருவிலங்கு விடுத்து, இருந்த சிறைவிடுத்து ஓர் நாடீயினல் /
கருநிலங்கள் கடக்கும்வழி, காவலரால் கடத்துவித்துப் *
பெருநிலங்கண்டு உயிர் உணர்ந்து, பிரியாமல் அருள்செய்யும் /
உருநலங் கொண்டுறுந் திருவோடு, உயரத்திகிரியானே.

8.10 *
தன் திருமாதுடனே தாம், தனி அரசாயுறைகின்ற /
அந்தமில் பேரின்பத்தில், அடியவரோடெமைச் சேர்த்து *
முந்தி யிழந்தனவெல்லாம், முகிழ்க்கத் தந்தாட் கொள்ளும் /
அந்தமிலா வருளாழி, அத்திகிரித் திருமாலே. 92)

8.11 *
அயன்பணியும் அத்திகிரி, அருளாளர் அடியிணைமேல் /
நயங்கள் செறி கச்சிநகர், நான்மறையோர் நல்லருளால் *
பயன்கள் இவையனைத்துமெனப், பண்டுரைத்தார் படியுரைத்த /
வியன் கலைகளீரைந்தும், வேதியர்கட்கு இனியனவே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

9. ஸ்ரீ வைணவதினசரி

9.1: *
வரி யிருள் அழிவழி, மனம் வரும் உணர்வொடு /
கரிகிரி மருவிய, கரியவனடியிணை *
பரிவொடு பரவுநல், அடியவர் பழவுரை /
அரி அரி அரி அரி, அரி அரி அரியே. (2)

9.2:
வினைவகை யொழுகிய, வெறி நிலையடையவும் /
நினைவுடை நிகழ்வெதிர், நிலை நலமணுகிட *
மனமுரை கிரிசைகள், மகிழ் மறை நெறிகொடு /
தனி முதல் அடியிணை, அடைபவர் தமரே.

9.3:
மலர்மகள் மருவிய, மறுவுடை யிறையவன் /
மலரடி கருதிய, மனமுடை யடியவர் *
மலர் புனலமுதுடன், வகையன அடையவும் /
மலர் மதி எமதல, என அறிபவரே.

9.4:
நறையுடை மலர்மகள், நலமுற மருவிய /
இறையவன் இனிதுற, இனியவை எணுமவர் *
அற நெறியிலன் என, அணுகிலும் அணுகிலர் /
துறை அலதெனும் ஒரு, துறை படுகிலரே.

9.5:
ஒளிமதியென வொரு, திருவுடன் உயர்பவன் /
நளிமதி முகநகை, நல நிலவு உகவுகள் *
தெளிபுனல முதன, செழு மதியடியவர் /
குளி முதல் கிரிசைகள், குறைகிலர் வலவே.

9.6:
வருவது ஓர் உருவென, வளர் இளவரசென /
மருவு நன் மகனென, வன மத கரியென *
அருவிலை மணியென, அடியவர் அடைபவர் /
அருகணை யிறைவனை, அரு கணையுடனே.

9.7:
விரை கமழ் மலர்கள், மிகவுறு மிறையவன் /
குரை கழல் குறுகிய, குளிர் மதி மதியொடு *
வரை நிலையடியவர், மறைகளின் மறையெனும் /
உரைநிரை பரவுவர், உளம் அமுதுணவே.

9.8:
துதிகளும் அறிவரு, சுருதியின் இறுதியின் /
இதயமிதென முனி, யிறையவர் உரைகளும் *
மதுர மன் உதவிய, மறைகளும் அடியவர் /
விதிவகை பரவுவர், மிகவுளமெழவே.

9.9 *
அறிவிலர் தலைமிசை, அயனடி யெழிதிய /
பொறிவகை யெழுவதோர், பொறிநலம் உகவலர் *
உறுவதும் உடையதும், இதுவென வருவது /
நறுமலர் மகள்பதி, நலமுறு நினைவே. (2)

9.10: *
பெருகிய நல நிலை, பெருமையின் மிகுமயல் /
உருகிய நிலை மன, முயர் முகிழெழு முடல் *
சொருகிய விழிதிகழ் சுடர்மதி புகுமிறை / /
கருகிய உருதிகழ், கரிகிரி அரியே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

10. திருச்சின்ன மாலை

தனியன்

மன்னு திருமந்திரத்தின் வாழ் துவயத்தின் பொருளும்
தன்னு புகழ்க் கீதை தனிற் சொன்ன எண்ணுன்கின் பொருளும்
அன்னவயற் கச்சி அருளாளர் திருச்சின்ன வொலி
இன்னபடி யென்று உரைத்தான் எழில் வேதாந்தாரியனே.

ஏகாந்த மூன்று மொழிலால் உரை செய்து
மகாந்தஞ் செய்தருளும் வள்ளலாய் – சாகாந்த
தேசிகனுந் தூப்புல் திருவேங்கடேச குரு
வாசகமே எங்களுக்கு வாழ்வு.

பரிச் சின்னமான இரு நாலெழுத்தின்பல் வண்மையெலாம்
விரிச்சு நலம் பெற ஓத வல்லோர்க்கிந்த மேதினிக்கே
மரிச் சின்ன மீளப் பிறவாமல் வாழ்விக்குமால் வரதர்
திருச்சின்ன ஓசை இனிமையுண்டோ மற்றைத் தேவருக்கே.

10.1: *
ஈருலகைப் படைக்க எண்ணி யிருந்தார் வந்தார்,
எழில் மலரோன் தன்னை அன்றே ஈன்றார் வந்தார்,
மாருதம் மண் நீர் ஆகும் மாயோர் வந்தார்,
வானோடு எரி ஆகும் மறையோர் வந்தார் *
சூரியர் தம்முடன் துலங்கு தூயோர் வந்தார்,
சுரர்களுக்கு அன்று அமுது அருள் சுந்தரனார் வந்தார்,
வாரிதி சூழ் வையகம் வாழ்வித்தார் வந்தார்,
வண்மையுடன் வரந் தருவார் வந்தார் தாமே. (2)

10.2:
அருமறையை ஊழிதனில் காத்தார் வந்தார்,
அதுதன்னை அன்று அயனுக்கு அளித்தார் வந்தார்,
தரும வழி அழியாமல் காப்பார் வந்தார்,
தாமரையாளுடன் இலங்கும் தாதை வந்தார் *
திரு உரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்,
திரு அருளால் செழுங்கலைகள் தந்தார் வந்தார்,
மருவலர்க்கு மயக்கு உரைக்கும் மாயோர் வந்தார்,
வானேற வழிதந்தார் வந்தார் தாமே.

10.3:
அனைத்து உலகும் காக்கும் அருளாளர் வந்தார்,
அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் வந்தார்,
தினைத்தனையுந் திருமகளை விடாதார் வந்தார்,
தேசொத்தார் மிக்காரும் இல்லார் வந்தார் *
நினைக்க நமக் கின்னறிவு தந்தார் வந்தார்,
நிலைநின்ற உயிர் தோன்ற நினைந்தார் வந்தார்,
எனக்கிவர் நானிவர்க்கென்ன இனியார் வந்தார்,
எழுத்தொன்றில் திகழ நின்றார் வந்தார் தாமே.

10. 4:
நாம் வணங்கத் தாம் இணங்கா நிற்பார் வந்தார்,
நம்மையடைக் கலங்கொள்ளு நாதர் வந்தார்,
நாமெமக்காம் வழக்கெல்லாம் அறுத்தார் வந்தார்,
நமக்கிதுவென்று உரையாமல் வைத்தார் வந்தார் *
சேமமெண்ணி எம்மை அன்பர்க் கடைந்தார் வந்தார்,
செழுந் தகவாற்றில் நின் சரணும் ஈசர் வந்தார்,
தாமனைத்துந் தீவினையைத் தவிர்ப்பார் வந்தார்,
தமக்கேயா யெமைக் கொள்வார் வந்தார் தாமே.

10. 5:
உலகெல்லாம் உள்ளேவைத்து உமிழ்ந்தார் வந்தார்,
உலகுடம்பாய்த் தாமுயிராய் நின்றூர் வந்தார்,
அலைகடலாய் ஆனந்த ம் அடைந்தார் வந்தார்,
அளவில்லா வருளாழிப் பெருமாள் வந்தார் *
திலகமெனுந் திருமேனிச் செல்வர் வந்தார்,
செழுங் குணங்கள் இருமூன்று முடையார் வந்தார்,
இலகுசுடர் முழுநலமாம் இனியார் வந்தார்,
எல்லார்க்குங் கதியானூர் வந்தார் தாமே.

10. 6:
அருளாலே விலங்கிரண்டும் அழிப்பார் வந்தார்,
அஞ்சிறையைக் கழித்தருளும் அன்பர் வந்தார்,
மருள் வாரா வகை நம்மைக் காப்பார் வந்தார்,
வானேற வழிநடத்தி வைப்பார் வந்தார்*
தெருள் ஆருந் தெளிவிசும்பு தருவார் வந்தார்,
திண்கழற்கீழ் வாழநமக் கருள்வார் வந்தார்,
பொருவானில் அடிமை நம்மைக் கொள்வார் வந்தார்,
பிரியாமற் காத்தளிப்பார் வந்தார் தாமே.

10. 7:
அகலகிலாத் திருமகளார் அன்பர் வந்தார்,
அடியிரண்டும் ஆருகத் தந்தார் வந்தார்,
புகலில்லார் புகலாகும் புனிதர் வந்தார்,
பொன்னுலகிற் திருவுடனே திகழ்வார் வந்தார் *
அகிலமெலாம் ஆனந்தம் ஆனூர் வந்தார்,
அடியிணைக்கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார்,
பக நடுவே இரவழைக்க வல்லார் வந்தார்,
பகலொன்றுய் இரவழித்தார் வந்தார் தாமே.

10. 8:
தருமன்விடத் தான் தூது போனூர் வந்தார்,
தரளிபொருத் திண்பாரந் தவிர்த்தார் வந்தார்,
அருமறையின் பொருளனைத்தும் விரித்தார் வந்தார்,
அஞ்சினநீ யென்னையடை என்றூர் வந்தார் *
தருமமெலாந் தாமாகி நிற்பார் வந்தார்,
தாமேநம் வினையனைத்துந் தவிர்ப்பார் வந்தார்,
பரமெனது நீபுலம்பல் என்றூர் வந்தார்,
பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார் தாமே.

10. 9:
வஞ்சனை செய் பூதனையை மாய்த்தார் வந்தார்,
மல்லர் மதகரி மாள மலைந்தார் வந்தார்,

கஞ்சனைப்போர் கடுஞ்சினத்தாற் கடிந்தார் வந்தார்,
கண்ணுதன்முன் வாணன் தோள் கழித்தார் வந்தார் *
வெஞ்சொல் அர வீடு கொடுத்து உகந்தார் வந்தார்,
விலக்கில்லா வழிநடத்த விரைந்தார் வந்தார்,
பஞ்சவரைப் பலவகையுங் காத்தார் வந்தார்,
பாஞ்சாலி குழன்முடித்தார் வந்தார் தாமே.

10. 10: *
அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்,
ஆனைபரி தேரின்மேலழகர் வந்தார்,
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்,
கருத வரம் தருதெய்வப் பெருமாள் வந்தார் *
முத்தி மழை பொழியு முகில் வண்ணர் வந்தார்,
மூலமென வோலமிட வல்லார் வந்தார்,
உத்தர வேதிக்குள்ளே யுதித்தார் வந்தார்,
உம்பர்தொழுங் கழலுடையார் வந்தார் தாமே. (2)

10. 11: *
மறைத்தலையில் இசையெழுத்தில் வணங்கும் வாக்கின்,
மந்திரத்தின் எலெழுத்தாந் திருநாமத்தில்,
நிறைத்திலகு வேற்றுமையில் இரண்டா மொன்றில்,
நெடுமால் தன் கீதையெலாம் நிறைந்த சொல்லில் *
உறைத்தவர் கண்டுரைத்த பொருளான வெல்லாம்,
உயர்விரத அருளாளப் பெருமாள் தேசின்,
திறத்திலியை திருச்சின்ன மாலை பத்துஞ்,
செவிக்கினிதாஞ் சிற்றின்பம் இசையாதார்க்கே. (2)

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

11. பன்னிருநாமம்

தனியன்

பன்னிரு நாமந் திருவத்தியூர்ப் பரன் பாதமென்று /
நன்னிற நாமம் படை திக்கு யாவையும் நாமறியத் /
தென்னந் தமிழ்த்தொடைச் சீரார் கலித்துறை யோதியீந்தான் /
மின்னுறு நூமலர் வேங்கட நாத நம் தேசிகனே.

கார்கொண்ட மேனியன் பாதாம் புயத்தைக் கருத்திருத்தி /
ஏர்கொண்ட கீர்த்தி யிராமாநுசன் தன் இணையடிசேர் /
சீர்கொண்ட தூப்புல் திருவேங்கடாரியன் சீர்மொழியை /
ஆர்கொண்டு போற்றினும் அம்மால் பதத்தை யடைவிக்குமே.

11.1: *
கேசவனாய்நின்று, கீழைத் திசையிலும் நெற்றியிலும் /
தேசுடையாழிகள் நான்குடன், செம்பசும்பொன் மலைபோல் *
வாசி மிகுத்தென்னை, மங்காமற் காக்கு மறையதனால் /
ஆசைமிகுத்த, அயன் மகவேதியில் அற்புதனே. (2)

11.2:
நாரணனாய், நல்வலம்புரி நாலுமுகந் தெடுத்து /
ஊரணி மேகமெனவே, உதரமும் மேற்கும் நின்றும் *
ஆரணநூல் தந்தருளால், அடைகலங் கொண்டருளும் /
வாரண வெற்பில், மழைமுகில்போல் நின்ற மாயவனே.

11.3:
மாதவ நாமமும், வான்கதை நான்கு மணிநிறமும் /
ஓது முறைப்படியேந்தி, உரத்திலும் மேலும் மல்கிப் *
போதலர் மாதுடன், புந்தியில் அன்பாற் புகுந்தளிக்கும் /
தூதனும் நாதனுமாய, தொல் அத்திகிரிச் சுடரே.

11.4:
கோவிந்தன் என்றுங் குளிர் மதியாகிக், கொடியவரை /
ஏவுந் தனுக்களுடன், தெற்கிலும் உட் கழுத்து நின்று *
மேவுந் திருவருளால், வினைதீர்த்தென்னை யாண்டருளும் /
பூவன் தொழ, அத்திமாமலைமேல் நின்ற புண்ணியனே.

11.5:
விட்டு வல வயிற்றின் கண், வடக்கும் விடாது நின்று /
மட்டவிழ் தாமரைத் தாது, நிறங்கொண்ட மேனியனாய்த் *
தொட்ட கலப்பைகள், ஈரிரண்டாலுந் துயரறுக்கும் /
கட்டெழிற்சோலைக், கரிகிரிமேல் நின்ற கற்பகமே.

11.6:
மதுசூதனன் என் வலப்புயம், தென்கிழக்கென்று இவற்றில் /
பதியா யிருந்து, பொன் மாதுறை பங்கய வண்ணனுமாய் *
முதுமா வினைகளறுக்கும், முயலங்கள் ஈரிரண்டால் /
மதுவாரிளம் பொழில், வாரண வெற்பின் மழைமுகிலே.

11.7:
திருவிக்கிரமந் திகழ் தீ நிறத்தன், தெளிவுடைவான் /
உருவிக் கரங்களில், ஈரிரண்டேந்தி வலக்கழுத்தும் *
செரு விக்கிரமத்து அரக்கர் திக்கும், சிறந்தாளுமிறை /
மருவி கரிகிரிமேல், வரந் தந்திடு மன்னவனே.

11.8:
வாமனன் எந்தன் வாமோதரமும், வாயுவின் திசையும் /
தாம மடைந்து, தருண அருக்கன் நிறத்தனுமாய்ச் *
சேம மரக்கலம், செம் பவி யீரிரண்டால் திகழும் /
நா மங்கை மேவிய, நான்முகன் வேதியில் நம்பரனே.

11.9:
சீரார் சிரீதரனுய்ச், சிவன் திக்கும் இடப்புயமும் /
ஏரார் இடங்கொண்டு, இலங்கு வெண் தாமரை மேனியனுய் *
பாராய பட்டயம், ஈரிரண்டாலும் பயமறுக்கும் /
ஆராவமுது, அத்தி மாமலைமேல் நின்றவச்சுதனே.

11.10:
என் இருடீகேசனிறை கீழ், இடக் கழுத்து என்று இவற்றில் /
நன்னிலை மின்னுருவாய், நாலு முற்கரங் கொண்டளிக்கும் *
பொன்னகில் சேர்ந் தலைக்கும், புனல் வேகை வடகரையில் /
தென்னன் உகந்து தொழும், தேனவேதியர் தெய்வமொன்றே.

11.11:
எம் பற்பநாபனும், என்பின் மனம் பற்றி மன்னி நின்று /
வெம் பொற் கதிரவனுயிரம், மேவிய மெய்யுருவாய் *
அம் பொற்கரங்களில், ஐம் படை கொண்டு அஞ்ச லென்றளிக்கும் /
செம் பொற் திருமதிள்சூழ், சிந்துராசலச் சேவகனே.

11.12: *
தாமோதரன் என்தன் தாமங்கள், நாலு கரங்களில் கொண்டு /
ஆமோதரமென, வாகத்தின் உட்புறம் பிற் கழுத்தும் *
தாமோர் இளங்கதிரோனென, என்னுள் இருளறுக்கும் /
மாமோக மாற்றும், மதிளத்தியூரின் மரகதமே. (2)

11.13: *
கத்தித் திரியுங் கலைகளை வெல்லும், கருத்தில் வைத்துப் /
பத்திக்கு உறுதுணை, பன்னிருநாமம் பயில்பவர்க்கு *
முத்திக்கு மூலமெனவே மொழிந்த, இம்மூன்று நான்கும் /
தித்திக்குமெங்கள், திருவத்தியூரைச் சேர்பவர்க்கே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

12. திருமந்திரச்சுருக்கு

12.1: *
நாவலர் மறை நாலொன்று, நலந்திகழ் மறை யொன்ற்ரோது /
ஆவலிப் பலேக்கு மோகத்து, அழுந்தி நின்று அலமர்கின்றீர் *
தூவலம் புரியா மொன்றில், துவக்கமாம் வண்ண மொன்ருற் /
காவலென் நகரத்து அவ்வாய்க், கருத்துறக் காண்மி னீரே. (2)

12.2:
இளக்கமில் மயக்கந் தன்னல், எனக்கு யானுரிய னென்னுங் /
களக்கருத் தொன்றே கொண்டு, கடு நரகடைந்து நின்றீர் *
விளக்குமவ் வெழுத்தி னலாம், வேற்றுமை யேற்றி வாங்கித் /
துளக்கமில் அடிமை பூண்டு, தூயராய் வாழ்மி னீரே.

12.3:
அப்பொரு ளிகந்து மற்றும், அழித்தழிந் தெழுவார் தாளில் /
இப்பொரு ளிகந்த வன்பால், இரங்கினீர் வணங்கி வீழ்ந்தீர் *
அப்பொரு ளுள்ளி மற்ருேர், உயிர் தனக்குரிமை மாற்றி /
எப்பொருட் பயனு மீதென்று எண்ணினிர் எழுமி னீரே.

12.4:
என்றுமோர் ஏதமின்றி, இரவியு மொளியும் போல /
வொன்றி நின்றுலகளிக்கும், உகமிகந் தடிமை வைத்தீர் *
ஒன்று மூன்றெழுத்தா யொன்றும், ஒன்றிலொன் றுடைய முன்னே /
ஒன்றிய விரண்டை யுள்ளி, யுளரென வுய்ம்மி னீரே.

12.5:
தத்துவ மறுநான் கோடு, தனியிறை யன்றி நின்ற /
சித்தினே யுணரா தென்றுந், திரள் தொகை யாகி நின்றீர் *
மத்தனேத் தனி விடாதே, மையிலா விளக்க மாக்கி /
உத்தமன் அடிமையான, உயிர்நிலே யுணர்மி னீரே.

12.6:
தனதிவை யனேத்து மாகத், தானிறை யாகு மாயன் /
உனதென முணர்த்தி தாராது, உமக்கு நீருரிமை யுற்றீர் *
எனதிவை யனேத்தும் யானே, யிறையெனு மிரண்டுந் தீர /
மநவெனு மிரண்டின் மாரு, வல்வினே மாற்று வீரே.

12.7:
அழிவிலா வுயிர்கட் கெல்லாம், அருக்கனு யழியா வீசன் /
வழியலா வழி விலக்கு, மதியெழ மாய மூர்த்தி *
வழுவிலா திவை யனேத்தும், வயிற்றில் வைத்துமிழ்ந்த மாலே /
நழுவிலா நார வாக்கில், நாடிநீர் நணுகு வீரே.

12.8:
வயனமொன் றறிந்து ரைப்பார், வங்கழல் வணங்கி வெள்கி /
நயன முள்ளின்றி நாளும், நள்ளிருள் நண்ணி நின்றீர் *
அயனம் இவ்வனேத்துக்கும் தான், அவை தனக்கயன மென்னப் /
பயனுமாய்ப் பதியுமான, பரமனேப் பணிமி னீரே.

12.9: *
உயர்ந்தவ ருணர்ந்த வாற்ருல், உவந்த குற்றேவல் எல்லாம் /
அயர்ந்து நீர் ஐம்புலன்கட்கு, அடிமை பூண்ட லமர்கின்றீர் *
பயந்திவை யனைத்து மேந்தும், பரமனர் நாம மொன்றில் /
வியந்த பேரடிமை தோற்றும், வேற்றுமை மேவு வீரே. (2)

12.10: *
எண்டிசை பரவுஞ் சீரோர், எங்களுக் கீந்த வெட்டில் /
உண்டவா றுரைப்பார் போல, ஒன்பது பொருளு ரைத்தோம் *
மண்டுநான் மறையோர் காக்கும், மாநிதி யிவைய னைத்துங் /
கண்டவர் விள்ளார் விள்ளக், கருதுவார் காண்கி லாரே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

13. துவயச்சுருக்கு

13.1: *
இன்னமுதத்திற் பிறந்தாள், இதங் கேட்க வுரைத்தபிரான் /
பொன்னருளால் மறை மௌலியில், பூண்ட விரண்டிசைத்துத் *
தன் உரை மிக்க தனம் இதெனத், தந்த வேதகத்திற் /
துன்னு பொருள்கள் பத்துந், தொலையா நிதி யாகின்றவே. (2)

13.2:
அரு வுருவானவை தன்னை யடைந்திடத், தானடைந்து /
வெருவுரை கேட்டு அவை கேட்பித்து, அகற்றும் வினைவிலக்கி *
இருதலை அன்புதனால், எமை இன்னடி சேர்த்தருளுந் /
திருவுடனே திகழ்வார், செறிந்தார் எங்கள் சிந்தையுளே.

13.3:
ஓருயிராய் நின்ற, வொண் சுடரின்ப வுருத்தனிலும் /
பேரு ருவத்திலும், பின்னதிற் தோற்றும் உருக்களிலும் *
ஓர் உருவான வுலகிலும், ஏற்கு முருக்களினால் /
சேருதன் மன்னு செய்யாளன்பர், நம்மனஞ் சேர்ந்தனரே.

13.4:
காரணமாய் இறையாய்க், கதியாய் அமரும் பதியாய் /
ஆரண மோதும் அனைத்துறவாய், அகலா வுயிராய்ச் *
சீரணியுஞ் சுடராய்ச், செறிந்தெங்குந் திகழ்ந்துநின்ற /
நாரணனார் நமக்காய் நல்கி, நாந்தொழ நின்றனரே.

13.5:
வானமர் மன்னுரு வாய், வகையால் அதில் நாலுருவாய் /
மீனமது ஆமை கேழன், முதலாம் விபவங்களுமாய் *
ஊனமருள்ளுருவாய், ஓளியாத வருச்சையுமாந் /
தேனமர் செங்கழலாஞ், சேர்த்தனங் கழலெம் மனத்தே.

13.6:
வேறொரணங்கு தொழும், வினை தீர்த்தெமை யாண்டிடுவான் /
ஆறுமதன் பயனுந், தந்தளிக்கும் அருளுடையான் *
மாறிலதாய் இலகும், அது மெல்லடிப் போதிரண்டால் /
நாறு துழாய் முடியான், எமக்குச் சரணாயினனே.

13.7:
பெறுவது நாம் பெரியோர், பெறும் பேறென நின்றவெம்மை /
வெறுமை யுணர்த்தி, விலக்காத நன்னிலை யாதரிப்பித்து *
உறுமதியால் தனை, ஒண் சரணென்ற வுணர்வு தந்த /
மறுவுடை மார்பனுக்கே, மன்னடைக்கல மாயினமே.

13.8:
அருமறை யாதுந் துறவோமென, அறிந்தார் கவருங் /
கருமமு ஞானமுங் காதலுங் கண்டு, முயலகில்லோம் *
வருவது மிங்கிலையாய், மயலுற்ற வெமக்குளதோ /
திருமகளார்ப் பிரியாத், திருமாலன்றி நற்சரணே.

13.9:
சுருங்கா வகிலமெலாந், துளங்கா வமுதக் கடலாய் /
நெருங்கா தணைந்துடனே நின்ற, நந்திரு நாரணனுர் *
இரங்காத காலங்களெல்லாம், இழந்த பயன்பெறவோர் /
பெருங் காதலுற் றினிமேற், பிரியாமை யுகந்தனமே.

13.10:
கடி சூடு மூன்றுங், கழல் பணிந்தார்க்குக் கடிந்திடவே /
முடிசூடி நின்ற, முகில் வண்ணனுர் முன்னுலகளந்த *
வடிசூடு நாம் அவர் ஆதரத்தால், உடுத்துக் களையும் /
படிசூடி யன்புடனே, பணி செய்யப் பணிந்தனமே.

13.11: *
தன தன்றிவையெனத், தானன்றென மறை சொன்னவெலாம் /
எனதென்றும் யானென்றும், எண்ணுதலால் வரும் ஈனமெலாம் *
மனதொன்றி யின்று, நமவென்றதே கொண்டு மாற்றுதலால் /
எனதன்றி யொன்றுமிலாத், தனித் தாதை சதிர்த்தனனே. (2)

13.12: *
சேர்க்குந் திருமகள், சேர்த்தியின் மன்னுதல் சீர்ப் பெரியோற்கு /
ஏற்குங் குணங்கள், இலக்காம் வடிவில் இணையடிகள் *
பார்க்குஞ் சரணத்தில், பற்றுதல் நம் நிலை நாம்பெறும் பேரு /
ஏற்கின்ற எல்லைகளெல்லாக், களையற வெண்ணினமே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

## 14. சரமசுலோகச்சுருக்கு

14.1: *
கல்லார் அகலுங், கருமமும் ஞானமுங் காதலும் /
மற்றெல்லா நிலைகளுக் கேற்ப, விதித்த கிரிசைகளும் *
வல்லார் முயல்க, வலி யிழந்தார் எந்தனைத் தொழுகென்று /
எல்லாத் தரும முரைத்தவன், இன்னடி சேர்ந்தனமே. (2)

14.2:
வெறுமை யுணர்ந்தது முன்னிட்டு, வேறு அங்கமில்லையெனக் /
குறியவன் இன் நறவு எட்டக், குறித்திடுங் கோணை துறந்து *
உறும் அயன் அத்திரம் என்னப், பொரு நிலை யோர்ந்திடவோர் /
அறநெறி அன்றுரைத்தான், அழியா வறமாயினனே.

14.3:
வாரிதி விட்டு, மலர் மகளோடு மதுரைவந்து /
பாரத வெஞ்சமர், பார்மகள் பாரஞ் செக வுகந்து *
சாரதியாய் முன்பு தூதனுமாய், தளரும் விசயன் /
தேரதில் நின்றவனைத், தேற்றினன் திறம் ஆயினமே.

14.4:
தன்னருளால் பெறுஞ் சாதனம், சாதகன் என்று இவற்றைத் /
தன்னுடன் எண்ணுதல் நீங்கத், தனித்தொரு சாதனமாய் *
பொன் னருளோடும் அப்பூமகளோடும், புகழ்நின்ற /
இன் உரை யீசனையே, ஏகம் எண்ண விசைந்தனமே.

14.5:
ஊனில் இணைத்து உழல்விக்கும், வினைக் கடலுள் விழுந்த /
யான் எனதான குணங்கள், எனக்கிசை நல்வழியுந் *
தான் உதவித் தனைத் தந்திட நின்ற, தனித்தருமம் /
நானினி வேறோர் பரம், நணுகா வகை நல்கியதே.

14.6:
கடுவினை நாம்பெறும் பேற்றைத், தகைந்தமை கண்டுநம்மேல் /
தொடை விலகாமல் இலிசைந்து, ஒரு காலந் துணிவுடனே *
உடைமை அடைக்கலமாக, அடைக்கும் உகப்பதனால் /
அடையென அன்றுரைத்தான் அடைவித்தனன் தன்னடியே.

14.7:
கானென்ற வேதங்கள், காக்கும் பரனென்று காட்ட நின்றோன் /
தான் என்றறிய கிலார்க்கு, அறிவிக்குந் தனித் திறலோன் *
வான் ஒன்றினரொடு, மானிடன் என்ன அவதரிப்பான் /
நான் என்ற நந்திருமால், நம்மை நற்பதஞ் சேர்த்திடுமே.

14.8:
தன்னிலை காட்டித், தனிமை யுகந்து தனித் தகவால் /
அல் நிலை தீர அடைக்கலங் கொண்டு, அடி சேர்த்திடவே *
பன்னிலை மூல வெழுத்திலும், பாண்டவன் தேர் தனிலும் /
முன்னிலை கொண்ட பிரான், எமை முன்னிலை கொண்டனனே.

*14.9:*
*காடுகளோ நரகோ, கடிதாம் கரளத் திரளோ /*
*சூடு விடா அனலோ, தொலையா நிலை நள்ளிருளோ ∗*
*சாடு படச் சரணால், அன்று சாடிய சாரதியார் /*
*வீடு செய்வித்து நம்மை, விடுவிக்கின்ற பாவங்களே.*

*14.10: ∗*
*சென்று உயர் வானமர்ந்து, அவ்வடியாருடன் சேர்ந்திடவே /*
*இன்று எனில் இன்று, நாளையெனில் நாளை இனிச்செறிந்து ∗*
*நின்ற நிலை நின்னனைத்து வினையும், நின் விட்டகலக் /*
*கன்றி விடுப்பன் என்றான், கருத்தால் நமைக் காத்திடுமே. (2)*

*14.11: ∗*
*அறிவும் அனைத்துமிலா அடியோமை, அடைக்கலங்கொண்டு /*
*உறவென நின்ற எல்லாம், உறவே நின்ற தான் எமக்காய் ∗*
*மறு பிறவித் துயர் வாரா வகை, மனங் கொண்டகலா /*
*இறையவன் இன்னருளால், எங்கள் சோகந் தவிர்த்தனனே. (2)*

*ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:*

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

15. கீதார்த்தசங்கிரகம்

தனியன்

கட்டப் பொருள்விரித்த காசினியில் நான்மறையின் /
இட்டப் பொருள் இயம்பும் இன் பொருளைச் / சிட்டர்தொழும்
வேதாந்த தேசிகனை மேவுவார் தங்கள் திருப் /
பாதம்புயம் அடியேன் பற்று.

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனார் /
பாதார விந்தமலர் பத்தியுடன் பற்று.

15.1: *
கருமமு ஞானமுங் கொண்டெழுங், காதலுக்கோர் இலக்கென்று /
அருமறை உச்சியுள், ஆதரித்தோதும் அரும்பிரமம் *
திருமகளோடு வருந், திருமாலென்று தானுரைத்தான் /
தருமமுகந்த தனஞ்சயனுக்கு, அவன் சாரதியே. (2)

15.2:
உகவை அடைந்த உறவுடையார், பொரலுற்ற அந்நாள் /
தகவுடன் அன்பு கரை புரளத், தருமத்து அளவில் *
மிக உளம் அஞ்சி விழுந்து, அடி சேர்ந்த விசயனுக்கோர் /
நகையுடன் உண்மை உரைக்க, அமைந்தனன் நாரணனே.

15.3:
உடலம் அழிந்திடும், உள்ளுயிரொன் றழியாது எனைப்போல் /
விடுமது பற்று, விடாதது அடைத்த கிரிசைகளே *
கடுக உனக்குயிர் காட்டும்  நினைவு, அதனால் உளதாம் /
விடு மயலென்று, விசயனைத் தேற்றினன் வித்தகனே.

15.4:
சங்கந் தவிர்ந்து, சகஞ்சதிர் பெற்ற தனஞ்சயனே /
பொங்குங் குணங்கள் புணர்ப்பு அனைத்தும், புக விட்டு அவற்றுள் *
நங்கண் உரைத்த கிரிசையெல்லாம், எனவும் நவின்றார் /
எங்கும் அறிவர்களே என்று, நாதன் இயம்பினனே.

15.5:
பிறவாமை தந்திடத், தானே பிறக்கும் பெருமைகளும் /
துறவாக் கிரிசைகள், தூமதி தன்னால் துலங்குகையும் *
இறவா உயிர் நன்னிலை கண்டிடும், உலகிந் நிலையும் /
மறை வாழ மாயவன், நேயனுக்கு அன்று அறிவித்தனனே.

15.6:
கண்டு எளிதாம் கருமம், உயிர் காட்டக் கடுகுதலும் /
மண்டி அதன்படியில், மனங் கொள்ளும் வரிசைகளுங் *
கண்டறியா உயிரைக், காணலுற்ற நினைவுகளும் /
வண் துவரேசன் இயம்பினன், வாசவன் மைந்தனுக்கே.

15.7:
யோக முயற்சியும், யோகிற் சமநிலை நால்வகையும் /
யோகின் உபாயமும், யோகுதனால் வரும் பேருகளும் *
யோகுதனில் தன் திறமுடை, யோகுதன் முக்கியமும் /
நாகணை யோகி நவின்றனன், நன்முடி வீரனுக்கே.

15.8:
தான் நின்ற உண்மையைத், தன் தனி மாயை மறைத்தமையும் /
தான் அன்றி மாயைதனைத் தவிர்ப்பான், விரகு அற்றமையும் *
மேல் நின்ற பத்தர்கள் நால்வரில், ஞானிதன் மேன்மைகளுந் /
தேனின்ற செங்கழலான், தெளிவித்தனன் பார்த்தனுக்கே.

15.9:
அராத செல்வமும், ஆருயிர் காணும் அரும்பயனும் /
பேராது தன் கழல் கீழ், அமரும் பெரு வாழ்ச்சிகளும் *
சோராது உகந்தவர், தூமதி கொள்வதுஞ் செய்வனவும் /
தேரா விசயனுக்குத், திரு நாரணன் செப்பினனே.

15.10:
தன் மேன்மையுந், தன் பிறப்பில் தளராத் தனிநிலையும் /
பல் மேனி நண்ணினன் பால், பிரியா அன்பர் ஆசைகளும் *
புல் மேனி விண்ணவர் பால், புரியாத தன் பத்திமையும் /
நல் மேனி நாரணன்தான், நரனுக்கு நவின்றனனே.

15.11:
எல்லையிலாத தன் சீலமாம், இன்னமுதக் கடலும் /
எல்லையிலாத விபூதியெல்லாந், தன தானமையும் *
எல்லையில் பத்திதனை, எழுவிக்கத் திருவருளால் /
எல்லையில் ஈசன் இயம்பினன், இந்திரன் மைந்தனுக்கே.

15.12:
எல்லம் தனக்குருவாய் இலங்கும் வகை, தானுரைத்துச் /
சொல்லால் அறிந்தது, சோராமற் கண்டடி வேண்டுமென்ற *
வில்லாளனுக்கு அன்று, மெய்க்கண் கொடுத்து இது வேறுமுண்டோ /
நல்லவர்கண் காண்பாரென்று, நவின்றான் நங்கள் நாயகனே.

15.13:
தன் கழலில் பத்தி தாழாததும், அதன் காரணமாம் /
இன்குண சிந்தையும், ஈதறியார்க்கு அவ்வடிமைகளும் *
தன் கருமங்கள் அறியாதவர்க்கு, இலகு நிலையுந் /
தன் கழலன்பர்க்கு, நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே.

15.14:
ஊனின் படியும், உயிரின் பிரிவும் உயிர்பெறுவார் /
ஞானம் பெறுவகையுஞ், ஞான மீன்ற வுயிர்ப் பயனும் *
ஊன் நின்றதற்கு அடியும், உயிர் வேறிடும் உள் விரகும் /
தேன் நின்ற பாதன், தெளிவித்தனன் சிலைப் பார்த்தனுக்கே.

15.15:
முக்குணமே யுயிர் முற்றவுங் கட்டிட, மூண்டமையும் /
முக்குணமே யனைத்தும் வினை கொள்ள, முயன்றமையும் *
முக்குண மாயை கடத்தலும், முக்கதி தந்தளிப்பும் /
முக்குண மற்ற பிரான், மொழிந்தான் முடியோன் தனக்கே.

15.16:
மூவெட்டினும், அதில் மோகமடைந்த உயிர்களினும் /
நாவெட்டெழுத்தொடு, நல் வீடு நண்ணின நம்பரினும் *
மேவெட்டு வன்குண விண்ணோர்களினும், விசயனுக்குத் /
தாவிட்டு உலகளந்தான், தனை வேறென்று சாற்றினனே.

15.17:
ஆணை மருதவர் தேவர், அல்லா வழக்கோர் அசுரர் /
கோணை மராத குணச்செல்வ, நீ குறிக்கொண் மறையைப் *
பேணிய தத்துவமும், பிணியற்ற கிரிசைகளுங் /
காண் இதனால் விசயாவென்று, கண்ணன் இயம்பினனே.

15.18:
மறை பொருந்தாதவை, வல் அசுரர்க்கு வகுத்தமையும் /
மறை பொருந்துந் நிலையின், வன் குணப்படி மூவகையும் *
மறை நிலை தன்னை வகுக்குங், குறி மூன்றின் மேன்மையுமம் /
மறை உமிழ்ந்தானுரைத்தான், வாசவன்தன் சிறுவனுக்கே.

15.19:
சத்துவ வீடுடை நற் கருமம், தானுகந்தமையுஞ் /
சத்துவமுள்ளது, தான் குறிக்கொள் வகை செய்ததுவுஞ் *
சத்துவ நற் கிரிசைப் பயனும், சரணாகதியுஞ் /
சத்துவமே தருவான் உரைத்தான், தனிப் பார்த்தனுக்கே.

15.20: *
வன் பற்று அறுக்கும் மருந்தென்று, மாயவன் தானுரைத்த /
இன்பக் கடலமுதாமென நின்ற, இக்கீதைதனை *
அன்பர்க்கு உரைப்பவர் கேட்பவர், ஆதரித்து ஓதுமவர் /
துன்பக் கடலுள் துளங்குகை நீங்கித், துலங்குவரே. (2)

15.21: *
தீதற்ற நற்குணப் பாற்கடல், தாமரைச் செம்மலர்மேல் /
மாதுற்ற மார்வன் மருவ, இன் கீதையின் வண்பொருளைக் *
கோதற்ற நான்மறை மௌலியின், ஆசிரியன் குறித்தான் /
காதல் துணிவுடையார், கற்கும் வண்ணங் கருத்துடனே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

16. மும்மணிக்கோவை

16.1: *
அருள் தரும் அடியவர் பால் மெய்யை வைத்துத் /
தெருள் தர நின்ற தெய்வ நாயக / நின்
அருள் எனும் சீர் ஓரிவையானது என /
இருள்செக எமக்கோர் இன்னொளி விளக்காய் /
மணிவரை யன்ன நின் திருவுருவில் /
அணி அமர் ஆகத்து அலங்கலாய் இலங்கி *

நின்படிக் கெல்லாம் தன்படி யேற்க /
அன்புடன் இன்றோடு அவதரித் தருளி /
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து /
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று /
தன்னடி சேர்ந்த தமருனை யணுக /
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே. (2)

16.2:
திருமாலடியவர்க்கு மெய்யனூர் / செய்ய
திருமாமகள் என்றுஞ் சேரும் * திருமார்பில்
இன்மணிக்கோவை, உடன் ஏற்கின்றூர் / என்றன் இம்
மும்மணிக்கோவை மொழி.

16.3:
மொழிவார் மொழிவன மும்மறையாகும், அயிந்தையில் வந்து /
இழிவார் இழிகவென்று, இன்னமுதக் கடலாகிநின்ற *
விழிவார் அருள் மெய்யர் மெல்லடி வேண்டிய, மெல்லியல்மேல் /
பொழிவார் அனங்கர் தம், பூங்கரும் புந்திய பூமழையே.

16.4: (நடை)
மழையில் எழுந்த மொக்குள் போல் வையம் /
அழியவொன்று அழியா அடியவர் மெய்ய /
அருமறையின் பொருளாய்ந்து எடுக்குங்கால் /
திருவுடன் அமர்ந்த தெய்வ நாயக /
நின் திருத்தனக்கு நீ திருவாகி /
இந்துதன் நிலவுடன் இலங்குதன் மையினை /

நந்துதல் இல்லா நல்விளக்காகி /
அந்தமில் அமுத ஆழியாய் நிற்றி /
பாற்கடல் தன்னில் பன்மணி யன்ன /
சீர்க்கணஞ் சேர்ந்த சீலம் எல்லையிலை /
அடியவர் பிழைகள் நின்கருத்து அடையாது /
அடைய ஆண்டருளும் அரசனும் நீயே /

உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை /
அயிந்தைமா நகரிலமர்ந்தனை எமக்காய்ச் /
சித்திரமணி எனத்திகழும் மன் உருவில் /
அத்திரம் அணியென அனைத்து நீ அணிதி /
விண்ணுள் அமர்ந்த வியன் உருவதனால் /
எண்ணிய ஈரிரண்டு உருக்களும் அடைதி *

பன்னிரு நாமம் பலபல உருவாய் /
இன்னுரு எங்கும் எய்திநீ நிற்றி /
மீனோடு ஆமை கேழல் கோளரியாய் /
வான் ஆர் குறளாய் மழுப்படை முனியாய்ப் /
பின்னும் இராமர் இருவராய்ப் பாரில் /
துன்னிய பரம் தீர் துவரை மன்னனுமாய்க் /

கலி தவிர்த்தருளும் கற்கியாய் மற்றும் /
மலிவதற்கு எண்ணும் வல்வினை மாற்ற /
நானா உருவங் கொண்டு நல்லடியோர் /
வான் ஆர் இன்பம் இங்குற வருதி /
ஓர் உயிர் உலகுக்கு என்னுநீ திருவோடு /
ஓர் உயிர் எல்லாம் ஏந்தி இன்புறுதி /

யாவரும் அறியா தெங்கு நீ கரந்து /
மேவு உருச் சூழ்ந்து வியப்பினால் மிகுதி /
கொண்டிட எம்மை அடைக்கலம் உலகில் /
கண்டிலம் கதி உன்னையன்றி மற்றொன்றும் /
பல்வகை நின்ற நின்படி அனைத்தினும் /
தொல்வகை காட்டுந் துணிந்து தூமறையே.

16.5:
தூமறையின் உள்ளம், துளங்காத் துணிவு தரும் /
ஆம் அறிவால் ஆர்ந்து அடிமை ஆகின்றோம் * பூமறையோன்
பாராயணத்தில் பணியும், அயிந்தைநகர் /
நராயணனார்க்கே நாம்.

16.6:
ஆர்கும் கருணை பொழிவான், அயிந்தையில் வந்தமர்ந்த /
கார்க் கொண்டலைக்கண்ட காதல், புனமயில் கண்பனியா *
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும், வெள்கி வெவ்வுயிர்க்கும் /
பார்க்கின்றவர்க்கு இது நாமென்கொலென்று, பயிலுவமே.

16.7: (நடை)
பயில் மதிநீயே பயில் மதிதருதலின் /
வெளியுநீயே வெளியுற நிற்றலின் /
தாயுநீயே சாயை தந்து உகத்தலின் /
தந்தையு நீயே முந்தி நின்றளித்தலின் /

உறவுநீயே துறவாது ஒழிதலின் /
உற்றதுநீயே சிற்றின்பம் இன்மையில் /
ஆறுநீயே ஆற்றுக்கருள்தலின் /
அறமுநீயே மறநிலைமாய்த்தலின் /

துணைவனுநீயே இணையிலை யாதனில் /
துய்யனும் நீயே செய்யாளுறைதலின் *

காரணம்நீயே நாரணனாதலின் /
கற்பகம்நீயே நற்பதந்தருதலின் /
இறைவனும்நீயே குறையொன்றிலாமையின் /
இன்பமும்நீயே துன்பம் துடைத்தலின் /

யானும்நீயே என்னுள் உறைதலின் /
 எனதும்நீயே உனதன்றி யின்மையில் /
நல்லாய்நீயே பொல்லாங்கிலாமையின் /
 வல்லாய்நீயே வையமுண்டு உமிழ்தலின் /

எங்ஙனமாகு மெய்யநின் இயல்பே /
 அங்ஙனேயொக்க அறிவது ஆரணமே.

16. 8:
ஆரணங்கள்தேட, அயிந்தைநகர் வந்துதித்த /
காரணராய்நின்ற கடல்வண்ணர் * நாரணனர்
இப்படிக்கு மிக்கு அன்று எடுத்த, பாதங்கழுவ /
மெய்ப் படிக்கமானது பொன்வெற்பு.

16. 9: *
வெற்புடன் ஒன்றிய, அயிந்தையில் வெவ்வினை தீர் மருந்தொன்று /
அற்புதமாக அமர்ந்தமை கேட்டு, அருள்வேண்டி நிற்கப் *
பற்பில் அமர்ந்த செய்யாள், படிகாட்டிய பண்புடை / எம்
வில் புருவக் கொடிக்குகோர், விலங்கா மயல் பெற்றனமே. (2)

16. 10: * (நடை)
பெற்றனைநீயே மற்றுளவெல்லாம் /
பெறுவதுநின்னை உறுவதுகொள்வார் /
நின்னாலன்றி மன்னர் இன்பம் /
நின் பொருட்டு நீ என் பொருட்டிலை *

நின் உரு நின்று மின்னுருத்தோன்றும் /
நின் தனக்கு நிகர் நின் அடி அடைவார் /
நின்பால் அன்றி அன்பால் உய்யார் /
வாரணம் அழைக்க வந்த காரணனே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

17. நவமணிமாலை

17.1: * (நடை)
ஒருமதி அன்பர் உளம் கவர்ந்தன /
உலகமடங்க வளர்ந்தளந்தன /
ஒருசடையொன்றிய கங்கைதந்தன /
உரக படங்கள் அரங்கு கொண்டன /

தருமம் உயர்ந்தது இதென்ன நின்றன /
தருமன் இரந்தது இசைந்து சென்றன /
சகடம் உடைந்து கலங்க வென்றன /
தமர்கள் அருந்தும் மருந்து இது என்பன *

திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின /
திகழ் துளவு உந்தும் மனம் கமழ்ந்தன /
செழுமணி கொண்ட சிலம்பு இலங்கின /
சிலைதனில் அன்று ஓர் அணங்கு உமிழ்ந்தன /

அருமறை அந்தம் அமர்ந்த பண்பின /
அயன்முடி தன்னில் அமர்ந்து உயர்ந்தன /
அருள்தர வெண்ணி அயிந்தைவந்தன /
அடியவர் மெய்யர் மலர்ப்பதங்களே. (2)

17.2: (நடை)
மகரம் வளரும் அளவில்பௌவமடைய வுற்று அலைத்தனை /
வடிவு கமடமென அமர்ந்து கிரிதனைத் தரித்தனை /
மலியும் அசுரன் உரமிடந்து வசுதையைப் பெயர்த்தனை /
வலிகொள் அவுணனுடல் பிளந்து மதலை மெய்க்கு உதித்தனை /

பகருமுலகம் அடியளந்து தமர்களுக்கு அளித்தனை /
பரசுமுனிவன் வடிவுகொண்டு பகைவரைத் துணித்தனை /
பணிய விசைவில் தசமுகன்தன் முடிகள் பத்து உதிர்த்தனை /
படியும் உருவில் வரு பிலம் பசுரனைத் தகர்த்தனை *

நகரி துவரையென உகந்து வரை கரத்தெடுத்தனை /
நடமொடு இயலு பரியில் வந்து நலிவு அறுக்க வுற்றனை /
நலியுன் வினைகள் செகுமருந்தின் நலமுரைந்த வெற்பினை /
நணுகு கருடநதி கிளர்ந்த புனல் உகப்பில் வைத்தனை /

அகரமுதல உரை கொள்மங்கை கணவனுக்களித்தனை /
அடையும் வினதை சிறுவனுய்ய அருள்கொடுத்து உயர்த்தினை /
அடியும் அணையும் எனும் அனந்தன் அடிதொழக் களித்தனை/
அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே.

17.3:
புரம் உயர்த்த அசுரர்கட்கோர், புறமுரைத்த பொய்யினன் /
வரையெடுத்து மழைதடுத்த, மழையொடு ஒத்த மெய்யினன் *
திரைநிரைத்த கடலெரித்த, சிலைவளைத்த கையினன் /
அருள்கொடுத்து வினைதவிர்க்கும், அடியவர்க்கு மெய்யனே.

17.4:
தேசொத்தாரில்லையெனும், தெய்வநாயகனுர் /
வாசக்குழல் மாமலராள், மணவாளர் *
வாசித்து எழும் மன்மதனுர், மணல் தோப்பில் /
மாசிக்கடலாடி, மகிழ்ந்து வருவாரே.

17.5:
உருளும் சகடமொன்றுதைத்தாய் /
உலகமேழு முண்டுமிழ்ந்து அளந்தாய் /
பொருளும் அழலும் இறையாகப் –
பூண்டேன் / அடிமையினின் மீண்டேன் *
இருளும் மருளும் தரும் அந்நாள் /
எழில் ஆராழிசங்கேந்தி /
அருளும் தெருளும் தரவென்பால் /
அடியோர் மெய்ய வந்தருளே.

17.6:
வஞ்சனை செய் பூதனையை மலியும் சாட்டை /
மல்லரையோர் மதகளிற்றை வானோர் அஞ்சும் /
கஞ்சனை முன் கடிந்து அவனி பாரந்தீர்ந்த /
காவலனே கோவலனுய் நின்ற கோவே *
அஞ்சனமும் காயாவும் அனைய மேனி /
அடியவர்க்கு மெய்யனே அயிந்தைவாழும் /
மஞ்செனவே அருள்பொழியும் வள்ளலே / நின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே.

17.7:
மையுமா கடலும் மயிலுமா மழையும் /
மணிகளும் குவளையுங்கொண்ட –
மெய்யனே / அடியோர் மெய்யனே விண்ணோர் –
ஈசனே / நீசனேனடைந்தேன் *
கையும் ஆழியுமாய்க் களிறு காத்தவனே /
காலனுர் தமரெனைக் கவராது /
ஐயனே வந்தன்று அஞ்சலென்றருள் / தென்
அயிந்தைமா நகர மர்ந்தானே.

17.8: * (நடை)
மஞ்சுலாவு சோலை சூழ அயிந்தை மன்னு மன்னுசீர் /
வரையெடுத்து நிரையளித்த மாசில் வாசுதேவனே /
செஞ்சொலன்பர் சிந்தை கொண்டு தீதிலாத தூதனுய் /
தேரு மூர்ந்து தேசுயர்ந்த செல்வம் தெய்வ நாயக *

வெஞ்சொலாளர் காலதூதர் வீசு பாசம் வந்தென்மேல் /
விழுந்தழுந்தி யானயர்ந்து வீழ்வதற்குமுன்ன நீ /
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்றளிக்க வேண்டும் அச்சுதா /
அடியவர்க்கும் அருளியக்கும் அடியவர்க்கு மெய்யனே. (2)

17.9: *
பொருத்தம் பொருந்தலும், போகுந் தவற்றுடன் பொய்ம்மதிமேல் /
விருத்தம் கலித்துறை, மேவும் அழல் மதம் வேறு இனியென் *
திருத்தமனத்தினிற், சேராவெமைத் தெய்வநாயக / நின்
வருத்தம் பொறுவருளால், மன்னடைக் கலங்கொண்டருளே. (2)

17.10: *
அந்தமில்சீர் அயிந்தை நகரமர்ந்த நாதன் /
 அடியிணைமேல் அடியுரையால் ஐம்பதேத்திச் /
சிந்தைகவர் பிராகிருதம் நூறு கூறிச் /
 செழுந்தமிழ் மும்மணிக்கோவை செறியச் சேர்த்து *
பந்து கழலம்மானை ஊசல் ஏசல் /
 பரவு நவமணி மாலை இவையும் சொன்னேன் /
முந்தைமறை மொழிய வழி மொழி நீயென்று /
 முகுந்தனருள் தந்த பயன் பெற்றேன் நானே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
ஸ்ரீராஸ்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

18. பிரபந்தசாரம்

சிறப்புத்தனியன்: எண்சீராசிரியவிருத்தம்

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்க ளாய்ந்தடைவே
அன்புடனே அம்புவியோர் அனைவரும் ஈடேறவென்று
நாரணனார் தாள்களிலே நாலாயிரம் தமிழால்
நண்ணியுரை செய்தவற்றை நாடிவகை தொகைசெய்தாய்
பூரணமா ஞானியர்சேர் பொங்குபுகழ்த் தூபுல்வரும்
புனிதனென்றும் பிள்ளையென்றும் புவியோர்புகழ் வேங்கடவா
தாரணியோர் இங்குகக்கச் சாற்றியநற் ப்ரபந்தசாரந்
தனையுரைத்து வாழுமனந் தந்தருளா யென்றனக்கே.

ஆதிமறை யோதிமகிழ் அயக்கிரிவர் தம்மருளால்
அன்புடனே தூப்புல் நகரவதரித்தே யிங்குவந்த
வாதியரை வென்றுவந்து வன் புவிமேல் எதிராசர்
வாழ்வுறு நற் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து
நீதிநெறி தவறாமல் நிறுத்தியிடும் வேங்கடவா
நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளையெல்லாம் உணர்ந்து
சாதுசனம் வாழவென்று சாற்றிய நற் ப்ரபந்தசாரந்
தனையுரைத்து வாழுமனம் தந்தருளாய் என்றனக்கே.

18.1: ஆசார்யவந்தனம் *
ஆழ்வார்கள் அவதரித்த நாளூர் திங்கள் /
அடைவு திருநாமங்கள் அவர்தாஞ் செய்த /
வாழ்வான திருமொழிகள வற்றுட் பாட்டின் /
வகையான தொகை யிலக்க மற்றுமெல்லாம் *
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும் /
விரித்துரைக்குங் கருத்துடனே மிக்கோர் தங்கள் /
நீள்பாத நிரந்தரமுந் தொழுது வாழ்த்தும் /
நேசமுடன் அயேன் தன் நெஞ்சு தானே. (2)

18.2: பொய்கையாழ்வார்:
அருள் மிகுத்த தொரு வடிவாய்க் கச்சி தன்னில் /
ஐப்பசி மாதத் திருவோணத்து நாளிற் /
பொருண் மிகுத்த மறை விளங்கப் புவியோர் உய்யப் /
பொய்கைதனில் வந்துதித்த புனிதா முன்னாள் *
இருளதனிற் தண்கோவல் இடைகழிச் சென்று /
இருவருடன் நிற்கவும் மாலிடை நெருக்கத் /
திருவிளக்காமெனும் வையந் தகளி நூறுஞ் /
செழும்பொருளை எனக்கருள் செய் திருந்த நீயே.

18.3: பூதத்தாழ்வார்:
கடன்மல்லை காவலனே பூத வேந்தே /
காசினிமேல் ஐப்பசியில் அவிட்ட நாள் வந்து /
இடர் கடியுந் தண்கோவல் இடைகழிச்சென்று /
இணையில்லா மூவருமாய் இசைந்தே நிற்க *
நடுவில் இவர் ஒருவரும் என்று அறியா வண்ணம் /
நள்ளிருளில் மால்நெருக்க நந்தா ஞானச் –
சுடர்விளக்கேற்றிய / அன்பே தகளியான –

தொடைனூறும் / எனக்கருள்செய் துலங்க நீயே.

18.4: பேயாழ்வார்:
மாமயிலைப் பதி யதனிற் துலா மாதத்தில் /
வரும் சதயத்து அவதரித்துக் கோவ லூரில் /
தூமுனிவர் இருவருடன் துலங்க நின்று /
துன்னிய பேரிருள் நீங்கச் சோதி தோன்றச் *
சேமமுடன் நெடுமாலைக் காணப் புக்குத் /
திருக்கண்டே என வுரைத்த தேவே / உன்தன் –
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும் /
பழவடியேனுக் கருள்செய் பரம நீயே.

18.5: திருமழிசையாழ்வார்:
தைமகத்தில் வரும் மழிசைப் பரனே / மற்றைச்
சமயங்கள் பலதெரிந்து / மாயோ னல்லாற்
தெய்வம் மற்றில்லை யெனவுரைத்த / வேதச்
செழும்பொருள் நான்முகன் தொண்ணூற்ருறு பாட்டும் *
மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடல் /
விளங்கிய நூற் றிருபதும் தப்பாமல் / மெய்யே
வையகத்து மறவாமல் உரைத்து வாழும் –
வகை / அடியேனுக்கருள்செய் மகிழ்ந்து நீயே.

18.6: நம்மாழ்வார்: *
முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும் /
முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும் /
மன்னிய நற்பொருட் பெரிய திருவந்தாதி /
மறவாத படி எண்பத்தேழு பாட்டும் *
பின்னுரைத்ததோர்த் திருவாய்மொழி / எப்போதும்
பிழையற ஆயிரத்து ஒரு நூற்றிரண்டு பாட்டும் /
இந்நிலத்தில் வைகாசி விசாகந் தன்னில் /
எழிற் குருகை வருமாரு விரங்கு நீயே. (2)

18.7: மதுரகவியஅழ்வார்:
தேறியமா ஞானமுடன் திருக்கோளூரில் /
சித்திரையிற் சித்திரை நாள் வந்து தோன்றி /
ஆறியனல் அன்புடனே குருகூர் நம்பிக்கு /
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து *
மாறனை யல்லால் என்று மறந்தும் / தேவு
மற்றறியேனெனும் மதுர கவியே / நீமுன்
கூறிய கண்ணிநுண்சிறுத்தாம்பு அதனிற் பாட்டு /
குலவு பதினொன்றும் எனக்கு உதவு நீயே.

18.8: குலசேகராழ்வார்:
பொன்புரையும் வேற் குலசேகரனே / மாசிப்
புனர்ப்பூசத் எழில் வஞ்சிக் களத்துத் தோன்றி /
அன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயில் /
அனைத்துலகின் பெருவாழ்வும் அடியார் தங்கள் *
இன்பமிகு பெருங் குழுவுங் காண / மண்மேல்
இருளிரிய வென்றெடுத்த இசையிற் சொன்ன /
நன்பொருள் சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும் /
நன்ருக எனக்கருள் செய் நல்கி நீயே.

18.9: பெரியாழ்வார்:
பேரணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில் /
பெருஞ்சோதி தனில் தோன்றும் பெருமானே / முன்
சீரணிந்த பாண்டின் தன் நெஞ்சு தன்னிற் /
இயக்கறமால் பரத்துவத்தை திறமாச் செப்பி *
வாரணமேல் மதுரை வலம் வரவே / வானின்
மால் கருட வாகனனுய்த் தோன்ற வாழ்த்தும் /
ஏரணி பல்லாண்டு முதற் பாட்டு / நானூற்று
எழுபத்தொன் றிரண்டும் எனக்குதவு நீயே.

18.10: கோதைப்பிராட்டி: *
வேயர்ப்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப் பூரம் /
மேன்மேலு மிகவிளங்க விட்டு சித்தன் /
தூய திருமகளாய் வந்து அரங்கனுர்க்குத் /
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே *
நேயமுடன் திருப்பவைப் பாடு ஆறைந்து /
நீயுரைத்த தையொரு திங்கட் பாமாலை /
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும் /
அன்புடனே யடியேனுக் கருள்செய் நீயே.

18.11: தொண்டரடிப்பொடியாழ்வார்:
மன்னுமதிள் திருமண்டங்குடி தான் வாழ /
மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து /
துன்னுபுகழ்த் தொண்டரடிப் பொடியே / நீமுன்
துழாய்மாலைப் பணியடிமை செய்து நாளுந் *
தென்னரங்க மணவாளற்கு அன்பு மிக்குச்
செப்பிய / நற் திருமாலை நாற்பத் தைந்தும் /
பன்னியநற் திருப்பள்ளி யெழுச்சி பத்தும் /
பழவடியேனுக் கருள்செய் பரிந்து நீயே.

18.12: திருப்பாணாழ்வார்:
உலகறிய மலிபுகழ்க் கார்த்திகை மாதத்தில் /
உரோகிணி நாள் உறந்தைவளம் பதியிற் தோன்றித் /
தலமளந்த தென்னரங்கர் பால் / உலோக
சாரங்க மாமுனி தோள்தனிலே வந்து *
பலமறையின் பொருளாற்பாண் பெருமாளே / நீ
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த /
சொல் அமலனுதிபிரான் பத்து பாட்டும் /
சோராமல் எனக்கருள்செய் துலங்க நீயே.

18.13: திருமங்கைஆழ்வார்: *
அறிவுதரும் பெரியதிருமொழி தப்பாமல் /
ஆயிரத்தோடு எண்பத்து நாலு பாட்டும் /
குறிய தொரு தாண்டகம் நாலைந்தும் / ஆறைந்து
குலா நெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை யொன்றும் *
சிறியமடற் பாட்டு முப்பத்தெட்டும் இரண்டும் /
சீர்ப்பெரியமடல்தனிற் பாட்டு எழுபத் தெட்டும் /
இறையவனே கார்த்திகையிற் கார்த்திகை நாள் /
எழில் குரையல் வருகலியா இரங்கு நீயே. (2)

18.14: ஸ்ரீபாஷ்யகாரர்: (திருவரங்கத்தமுதனுர்) *
தேசமெல்லாம் உகந்திடவே பெரும்பூதூரில் /
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றிக் /

காசினிமேல் வாதியரை வென்று / அரங்கர்
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா * முன்
பூசுரர்க்கோன் திருவரங்கத்து அமுதனார் / உன்
பொன்னடிமேல் அந்தாதியாகப் போற்றிப்
பேசிய / நற் கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும் /
பிழையறவே எனக்கருள்செய் பேணி நீயே. (2)

18.15:
எண்ணின் முதலாழ்வார்கள் மூன்று நூறும் /
எழில் மழிசைப் பிரான் இருநூற்று ஒருபத்து ஆறும் /
உண்மைமிகு மாறன் மறை ஆயிரத்தோடு
உற்ற / இரு நூற்றுத் தொண்ணூறும் ஆறும் *
வண்மையுடை மதுரகவி பத்தும் ஒன்றும் /
வஞ்சியர்க்கோன் நூற்றைந்தும் / பட்ட நாதன் –
பண்ணிய நானூற்று எழுபத்து மூன்றும் /
பார்க்கோதை நூற்று எழுபத்து மூன்றே.

18.16:
பத்தரடிப் பொடி பாடல் ஐம்பத்தைந்தும் /
பாணர்புகழ் பத்துடனே பரகாலன் சொல் /
அத்தனுயர் வேங்கடமாற்கு ஆயிரத்தோ –
டான / இரு நூற்றேர் ஐம்பத்து மூன்றும் *
முத்திதரும் எதிராசர் பொன்னடிக்கே –
மொழிந்த / ஆமுதர் பாடல் நூறும் எட்டும் /
எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த
இவை / நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே.

18.17: *
வையக மெண் பொய்கை பூதம் பேயாழ்வார் /
மழிசையர்க்கோன் மகிழ்மாறன் மதுர கவி /
பொய்யில்புகழ்க் கோழியர்க்கோன் விட்டு சித்தன் /
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணாழ்வார் *
ஐயனருட் கலியன் எதிராசர் தம்மோடு /
ஆறிருவர் ஓரொருவர் அவர் தாஞ்செய்த /
துய்யதமிழ் இருபத்து நான்கிற் பாட்டின் –
தொகை / நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே. (2)

18.18: *
அந்தமிலா ஆரணங்கள் நாலாகி நின்ற /
அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்துச் /
செந்தமிழால் அருள் செய்த வகை தொகையும் /
சிந்தாமல் உலகங்கள் வாழ வென்று *
சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் /
வேதாந்த குருமொழிந்த ப்ரபந்தசாரம் /
சிந்தையினால் அனுதினமுஞ் சிந்திப்போர்க்குச் /
சேமமதாந் திருமால்தன் கருணை யாலே. (2)

சீரார்த்தூபுல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிகன் திருக்குமாரர் ஸ்ரீ நயினாசாரியார் அருளிச்செய்த

பிள்ளையந்தாதி

தனியன்

சீரார்தூப்புல் பிள்ளை அந்தாதி என்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ்மொழிந்தான்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ் உலகு உயவே
சீராகிய வரதாரியன் பாதந் துணை நமக்கே.

1: *
மாமலர் மன்னிய மங்கை, மகிழ்ந்துறை மார்பினந்தாள் /
தூமலர் சூடிய தொல்லருள் * மாறன் துணையடிக்கீழ் –
வாழ்வை யுகக்கும் / இராமானுசமுனி வண்மைபோற்றும் –
சீர்மை / எங்கள் தூப்புல் பிள்ளைபாதமென் சென்னியதே. (2)

2:
சென்னி வணங்கச், சிறுபனி சோரவெங் கண்ணிணைகள் /
வெந்நர கங்களும் வீய வியன்கதி இன்பமேவத் *
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த் தாள் –
மன்னிய / நாள்களும் ஆகுங்கொல் / மாநிலத்தீர் நமக்கே.

3:
மாநிலத் தோதிய / மாமறை மன்னிய நற்கலைகள் /
ஆனவை செப்பும் அரும்பொருள் அத்தனையே அருளும் *
தூநெறி காட்டும் இராமானுசமுனித் தோத்திரஞ்செய் /
ஊனமில் தூப்புலையன் / ஓர் புகழின்றி உய்வில்லையே.

4:
உய்யும் வகையில்லை / உத்தர வேதியுள் வந்துதித்த /
செய்யவண் மேவிய சீர் அருளாளரைச் * சிந்தைசெயும்
மெய்யவன் எந்தை / இராமானுசனருள் மேவிவாழும்
ஐயன் / இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருளன்றியே.

5:
அன்றிவ் வுலகினை யாக்கி / அரும்பொருள் நூல்விரித்து /
நின்றுதன் நீள்புகழ் வேங்கட மாமலை மேவி * பின்
வென்றிப் புகழ்த் திருவேங்கட நாதனெனும் குருவாய் /
நின்று நிகழ்ந்து / மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே.

6:
வித்தகன் வேதியன் / வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல் /
மெய்த்தவன் உத்தமன் வேங்கட நாதன் வியன் கலைகள் *
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக் /
கைத்தவன் என்றுரைத்தேன் / கண்டிலேன் என் கடுவினையே.

7:
வினைகாள் உமக்கு / இனி வேறோர் இடந்தேட வேண்டும் /
எனிச் சினமேவி முன்போற் சிதைக்கும் வகையிங்கு அரிது கண்டீர் *

*என் எனில் இராமானுசமுனி இன்னுரை சேரும் / தூப்புல்*
*புனிதர் / என்புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே.*

*8:*
*பொருந்திப் புவிதனிற் / பொய்வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள் /*
*இருந்து நரகினிடர் கெடு மாற்றை அறிகின்றிலீர் **
*பொருந்தும் பொருளொன்று கேளீர் / பொங்கும்மிவ் இடர்க்கடற்கு –*
*வருந்தாது / தூப்புல் மா புருடன் பாதம் வணங்குமினே.*

*9:*
*வணக்கம் ஒடுக்கம் / வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும் /*
*இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் மிகந்து நிற்குங் **
*குணக் குலமோங்கும் இராமானுசன் குணங் கூறும் / தூப்புல்*
*அணுக்கனைப் பிள்ளை தனை / அரணாக அடைபவர்க்கே.*

*10:*
*அடைபவர் தீவினை மாற்றி / அருள் தருந் தூப்புலைய /*
*இடர்தரும் இப்பிறவிக்கடல் தன்னில் அமிழ்ந்தவென்னைக் **
*கடையறப் பாசங் கழற்றி நின் தாளிணைக் காணும் வண்ணம் /*
*உடையவனே அருளாய் / உணர்ந்தார் தங்கள் கற்பகமே.*

*11:*
*கற்பகமே என்று / காசினியோரைக் கதிக்கமாட்டேன் /*
*வெற்பிடையே நின்று வெந்தவத் தீயிலும் வேவமாட்டேன் **
*பற்பல கலைவல்ல பாவலனே பத்தரேத்தும் தூப்புல் /*
*அற்புதனே அருளாய் / அடியேனுக் கரும்பொருளே.*

*12:*
*பொருளான தொன்றும் / என்னில் பொருந்தாதது மன்றி அந்தோ /*
*மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்றேன் **
*தெருளார் மறைமுடித் தேசிகனே / எங்கள் தூப்புல் தேவே –*
*அருளாய் / இனியெனக்கு உன்னருளே அன்றி ஆறில்லையே.*

*13:*
*ஆறாக வெண்ணும் / அருங்கருமம் ஞானங் காதல்கொண்டு /*
*வேறாக நிற்கும் விரகெனக் கில்லை விரத்தியில்லை **
*தேறாது திண்மதி சீரார் கதியிலுஞ் செம்பொன்மேனி /*
*மாறாத தூப்புல் மாலே / மறவேன் இனி நின்பதமே.*

*14:*
*நின்பதந் தன்னிலும் / நேரே எனக்கில்லை அன்புகண்டாய் /*
*நின் பதம் ஒன்றிய அன்பரிலும் நேசமில்லை அந்தோ **
*என்படி கண்டு இனியென் பயன் ஏதமில் தூப்புலெந்தாய் /*
*உன்படியே அருளாய் / உதவாயெனக்கு உன்னருளே.*

*15:*
*உன்னருளன்றி / எனக்கொரு நற்றுணை இன்மையினால் /*
*என்னிருவல் வினை நீயே விலக்கி யிதங்கருதி **
*மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே /*
*பொன்னருளால் அருளாய் / புகழ் தூப்புல் குலவிளக்கே.*

16:
விளக்காகி / வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள் /
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனதடியார் *
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலுந் தூய்மையெண்ணிக் /
களக்காதல் செய்யு நிலைகடியாய் / தூப்புல் காவலனே.

17: *
காவலர் எங்கள் / கிடாம்பிக் குலபதி அப்புளார்தம் /
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து * அவர் தம்மருளால்
நா அலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற / நம்பிக்
காவலர் தூப்புல் குலத்தரசே / எம்மைக் காத்தருளே. (2)

18:
அருள்தரும் ஆரண தேசிகனே / எங்கள் தூப்புல் தேவே /
வரு கவி தார்க்கிக சிங்கமே / வாதியர் வாழ்வறுத்தாய் *
இருகையும் கூப்பி உரைக்குமிவ் விண்ணப்பம் ஒன்றுகேளாய் /
உருவ எனக்கருளாய் / எண்ணுமுள்ளமுன் தொண்டரையே.

19: *
தொண்டருகக்குந் துணையடி வாழி / நின் தூமுறுவல் -
கொண்ட முகம்வாழி / வாழி வியாக்கியா முத்திரைக்கை *
வண்திரு நாமமும் வாழி / மணிவட முப்புரிநூல் -
கொண்டசீர்த் தூப்புல் குலமணியே / வாழி நின்வடிவே. (2)

20: *
வடிவழ கார்ந்த / வண் தூப்புல் வள்ளல் மென் மலரடிமேல் /
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன் *
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்து ஓதுமன்பர் /
முடியிடை நேர்படும் / தூப்புலம்மான் பத மாமலரே. (2)

சீரார்த்தூபுல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: